# செம்பதாகை

மலர்: 8
இதழ்: 9
புரட்டாதி 1985
விலை ரூபா 2-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# போர் நிறுத்த உடன்பாடு உண்மையாக இருக்குமா?

★ பாதுகாப்புக்கு மேலதிகமாக 83 கோடி

★ துணைப்படைச் சட்டம் நிறைவேற்றம்

★ கட்டாய ராணுவப் பயிற்சித் திட்டம்

இந்தியாவின் முயற்சியினால் இலங்கையில் இரண்டாவது தடவையாகப் போர்நிறுத்த உடன்பாடு ஒன்றுக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இவ் உடன்பாடு எவ்வளவிற்கு நேர்மையாகக் கடைப்பிடிக்கப்படும் என்பதே பிரதான கேள்வியாகும். ஏனெனில் முதலாவது போர்நிறுத்த காலத்தில் அதற்காக வரையறுக்கப்பட்ட போர் நிறுத்த விதிகள் உரியபடி கைக்கொள்ளப்படவில்லை. அதனாலேயே தற்போதைய போர்நிறுத்தமாவது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள்.

போர்நிறுத்த உடன்பாடு என்பது நமது நாட்டிற்கு மட்டும் புதுமையான ஒன்றல்ல. சர்வதேச ரீதியாக நடைபெறும் சகல போராட்டங்களிலும், யுத்தங்களிலும் பின்பற்றப்படும் ஒரு நடைமுறையாகும். இவ்விடயத்தில்சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் குறைந்தபட்சமாவது நேர்மையைப் பின்பற்றாது விட்டால் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி தாம் ஏற்றுக்கொண்டவற்றையே அர்த்தமற்றதாக்கி விடமுடியும். அதன் விளைவு ஒன்றுமறியாத மக்கள் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

இலங்கையின் இனப்பிரச்சினையை இன்றைய நிலைக்குக் கொண்டுவந்துள்ள யூ.என்.பி. பேரினவாத ஆட்சியின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் மிகப் பெரும் இடைவெளியே இருந்துவருகின்றது. அதனடிப்படையில் முதலாவது போர்நிறுத்த காலத்தில் ஏராளம் யுத்தமீறல் சம்பவங்கள் இடம்பெற்றன. ரோந்து தேடுதல், சுற்றி வளைத்தல் போன்றவற்றால் ஒன்றுமறியாத தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், அகதிகளாக்கவும் பட்டனர். இதனால் யாழ்குடாநாட்டிற்கு வெளியே போர் நிறுத்தம் என்பது கேலிக்குரியதாகவும் ,மக்களுக்கு துன்பம் விளைவிக்கும் ஒன்றாகவுமே இருந்து வந்தது. இது விசனத்துக்குரியதும் வெறுக்கத்தக்கதுமான தொன்றாகும். இது போன்றதுதான் தற்போதைய இரண்டாவது போர் நிறுத்தம் என்றால் அத்தகைய தொன்று ஏன் என்ற கேள்வியே மக்கள் மத்தியில் எழுகின்றது.

இந்த அரசைப் பார்த்து சந்தேகம் கொள்வதற்கும், அதன் நடைமுறை பற்றிக் கேள்வி எழுப்புவதற்கும் மக்களுக்குப் போதிய ஆதாரம் உண்டு. அண்மையில் பாராளுமன்றத்தில் ஆயுதப் படைகளின் நான்கு பிரிவுகளுக்கும் மொத்த மேலதிகச் செலவுக்காக எண்பத்திமூன்று கோடி ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து துணைப்படை ஒன்றை உருவாக்குவதற்கான சட்டமூலம் அவசர அவசரமாக ஒரே நாளில் நிறவேற்றப்பட்டது. அதில் கட்டாய ராணுவப் பயிற்சிக்கான ஷரத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. கட்டாய ராணுவப் பயிற்சியை ஒருவர் மறுத்தால் அவருக்கு நாலு வருடச் சிறைத் தண்டனை வழங்க வழிசெய்யப்பட்டுள்ளது. மேலும் பொலீஸ் ரிசேர்வ் படை விஸ்தரிக்கப்பட்டு பயிற்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கும் திட்டம், பாடசாலைகளை பயிற்சி முகாமாக்கும் நடைமுறை போன்றவை செயல்படவுள்ளன. இவற்றுடன் கூடவே ஆயுதக்கொள்வனவும், வெளிநாட்டுப் பயிற்சிகளும் தொடர்கின்றன. இவை யாவும் எதற்காக செய்யப்படுகின்றன. அரசியல் தீர்வுக்காகவா? அன்றி இராணுவத் தீர்வுக்காகவா? தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமன்றி முழு நாட்டு மக்களையும் எதிர் காலத்தில் கொடிய சர்வாதிகார அடக்குமுறையின் கீழ் வைத்திருக்கவே இனப்பிரச்சினையின் மறைவில் யாவும் செய்யபடுகின்றது என்பதைச் சிங்கள மக்களும் உணர ஆரம்பித்துள்ளனர்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் சரியானது என்று கூறிக்கொண்டு இராணுவத் தீர்வை நோக்கியே அரசு சென்று கொண்டிருக்கின்றது. தனது இராணுவ தயாரிப்புக்களை இப் போர் நிறுத்த காலத்திலாவது அரசு

( 6ம் பக்கம் பார்க்க )

# திருமலையில் திட்டமிட்ட இன அழிப்பு

# வடக்கிலே தமிழ் அகதிகள் அதிகரிப்பு!

திருகோணமலை மாவட்டத்தின் பலபகுதிகள் பெரும் அழிவுகளுக்கு உள்ளாகி மக்கள் தமது இருப்பிடங்களை இழந்து அகதிகளாகி உள்ளனர். இவ்வாறு அகதிகளாகியவர்களில் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர் ஆகியோர் அடங்குவர். திருகோணமலையில் அதிக பாதிப்பை அடைந்துள்ளவர்கள் தமிழ் மக்களேயாவர். ஆயுதப்படைகள் ஒருபுறமாகவும், ஆயுதம் ஏந்திய காடையர்படை மறுபுறமாகவும் தமிழ் மக்களை இம்சைப்படுத்தியுள்ளன. உயிர் உடமை சேதங்கள் இதுவரை ஏற்படாதவாறு நிகழ்ந்துள்ளன. அதேபோல் சிங்கள மக்களும் இனம் தெரியாத ஆயுதம் தரித்தவர்களினால் கொல்லப்பட்டும், கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் அகதிகளாகி உள்ளனர். இது பழிக்குப் பழி என்ற அடிப்படையில் நடந்துள்ளன. இதுவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தொன்றல்ல.

திருகோணமலையில் தமிழ் மக்களின் எண்ணிக்கையை பலமடங்கு குறைக்கவும், அதேவேளை சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நீண்டகாலமாக உள்ளார்ந்த நடவடிக்கைகள் நடைபெற்று வந்துள்ளன. அதாவது முக்கியத்துவம் மிக்க திருமலையானது தமிழர்களது பாரம்பரிய பிரதேசமாக இருப்பதை எப்படியும் மாற்றிவிடவே தொடர்ந்து வந்த ஆட்சிகள் செயல்பட்டு வந்தன. இதில் திட்டமிட்ட குடியேற்றம் அவர்களின் நோக்காகவும் போக்காகவும் இருந்து வந்தது. ஆனால் தற்போது பேரினவாத யூ. என். பி தமிழர்களுக்கு எதிரான வன்முறையை வேகப்படுத்தி திருமலையில் தமிழர்களது எண்ணிக்கையையும், பலத்தையும் குறையாட முன்வந்து செயல்படுகின்றது. அதுவே அண்மைக்காலத்தொடர் தாக்குதல்களாகும்.

இன்றுபோல் திருமலையில் இருந்து தமிழ் மக்கள் ஒரு போதும் வடக்கு நோக்கி அகதிகளாக வந்தது இடையாது. இன்று வடக்கில் கிட்

( 6ம் பக்கம் பார்க்க )

# இஸ்ரேலியரின் மிலேச்சத்தனத் தாக்குதல்

# இலங்கைஅரசு முதலைக்கண்ணீர் வடித்தது!

பாலஸ்தீனிய மக்களின் சொந்தத் தாயகத்தைப் பறித்து அவர்களை அயல் நாடுகளுக்கு அகதிகளாகத் துரத்தியவர்கள் இஸ்ரேலிய சியோனிசவாதிகள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பேராதரவுடன் பலஸ்தீன மக்களை அழித்தொழித்து அரபு உலகத்தை அடக்கி வைத்திருக்கவே இஸ்ரேலியர்கள் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மனிதப் படுகொலைகளுக்கு உலகில் பெயர்பெற்ற இஸ்ரேலியர்கள் அண்மையில் டியூனிஷியாவின் தலைநகரில் அமைந்துள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகத்தை விமானக் குண்டு வீச்சின் மூலம் தாக்கியுள்ளனர். இதனால் அறுபதுபேர் வரை கொல்லப்பட்டனர். இஸ்ரேலில் இருந்து 1500 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள ஒரு சுதந்திர நாட்டின் ஆகாய எல்லைக்குள் புகுந்து விமானத் தாக்குதல் நடத்துவது என்பது வெறும் தாக்குதல் அல்ல. அதுவும் அகதிகளாக்கப்பட்ட பலஸ்தீன மக்களின் விடுதலை இயக்கத் தலைமையகத்தை தாக்குவது மிலேச்சத்தனம் அன்றி வேறு எதுவுமல்ல. இந்தக் காட்டுமிராண்டித் தனத்திற்கு உலகப் பயங்கரவாதத்தின் தலைமை நாடான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவனை ரேகன் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளான். இதன் மூலம் இஸ்ரேலின் முகத்தில் மட்டுமன்றி ரேகனின் முகத்திலும் உலக மக்கள் காறித் துப்பியுள்ளனர். உலக மக்களின் சீற்றத்தின் தாக்கத்திற்கு முகங்கொடுக்க முடியாமலும், சொந்த நாட்டு மக்களை ஏமாற்றவும், குறிப்பாக முஸ்லீம் மக்களைத் திருப்திப்படுத்தவும் இலங்கை அரசு சார்பான ஒரு கண்டனம் வெளியிடப்பட்டது. அதுவும் இரண்டு முஸ்லீம் அமைச்சர்களைக் கொண்டே அரசின் கண்டனம் விடுக்கப்பட்டது. இக் கண்டனம் உண்மையானதல்ல. வெறும் முதலைக் கண்ணீரேயாகும். உலகிலே

(6ம் பக்கம் பார்க்க)

**செம்பதாகை**
**பெயர்**
**மாறுகிறது**
**விபரம்**
**2ம் பக்கத்தில்**

# தர்ம உபதேசத்துடன் நாடு ராணுவமயமாகிறது!

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமனாளி

“நான் ஒரு அகிம்சாவாதி, பலாத்காரத்தின் மீது எனக்கு நம்பிக்கையில்லை. எந்தப் பிரச்சினையையும் சமாதானத்தின் மூலமே தீர்வு காண விரும்புகின்றேன்”. இவ்வாறு கூறி வருபவர் ஜனாதிபதி ஜே. ஆர். “பௌத்த தர்மத்தின் வழிநின்று அன்பு, கருணை, சமாதானம் என்பனவற்றின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகவும் தீர்க்கவும் நாம் முயல வேண்டும். அப்படியானால் மட்டுமே நாம் உண்மையான பௌத்தர்களாக வாழமுடியும்”. இவ்வாறு கூறிவருபவர் பிரதமர் பிரேமதாசா. இவ்வாறு இவர்கள் மட்டுமன்றி ஏனைய அமைச்சர்களும் பௌத்த தர்மத்தின் பலகூறுகளைப்பற்றி ஓயாது உபதேசம் செய்து வருகிறார்கள். ஒரு புறத்தில் இவ் உபதேசங்களைச் செய்யும் இதே தலைவர்களும் இவர்களது ஆட்சியும் மறு புறத்தில் எதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாட்டை முழு அளவிலான ராணுவ மயப்படுத்தலுக்கு உள்ளாக்கி வருகிறார்கள். மிக அண்மையில் கூட ராணுவச் சட்டம் வரக்கூடிய சூழ்நிலை பற்றியும், அக்கட்டத்தில் மக்கள் பேச்சு, எழுத்து, நீதிச் சுதந்திரங்களை இழக்கவேண்டி ஏற்படும் என்று கூடப் பகிரங்கமாகவே கூறி இருக்கிறார்கள்.

இப்படியாக ஒரே மனிதர்கள் இரண்டு விதமாகப் பேசுவதுபற்றி மக்கள் என்ன முடிவுக்கு வரவேண்டும். இவ் இரண்டு பேச்சுக்களில் ஒன்றைத்தான் நம்பவேண்டும். இரண்டையும் ஒரே நேரத்தில் நம்பமுடியாது. ஏனெனில் இரண்டும் ஒன்றுக்கொன்று நேர் எதிரான விடயங்களாகும். அப்படியானால் அகிம்சை, அன்பு, கருணை என்று கூறப்படுபவற்றையோ அல்லது சமாதானம் ஜனநாயகம் என்று இசைக்கப்படுவதையோ மக்கள் நம்பிக் கொள்ள முடியாது. இரண்டாவதாகக் கூறிய ராணுவச் சட்டம், சுதந்திர உரிமைகளை மக்கள் இழக்க நேரிடும் போன்ற அபாய அறிவித்தல்களையே நம்பவேண்டியுள்ளது. ஏனெனில் அவற்றிற்கான நடைமுறைகளே முன் கூறியவற்றுக்கான நடைமுறைகளைவிடப் பல பத்து மடங்கு விஞ்சி நிற்கின்றன. அரசின் ஆயுதக் கொள்வனவா? என்று வெளிநாட்டு அவதானிகளே பிரமிப்புக் கொள்ளும் அளவுக்கு விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் பல இரகசியமாகவும் சில பரகசியமாகவும் இடம்பெறுகின்றன.

மேலும் படைகளுக்கு ஆள்திரட்டல், பயிற்சி அளித்தல் சாதாரண குடிமக்களையும் ராணுவப் பயிற்சித் திட்டத்தில் இணைத்தல், ராணுவ தளபாடங்களைக்கொள்வனவு செய்தல் ராணுவநிலையங்களை விஸ்தரித்து உறுதிப்படுத்தல் என்பன துரிதகதியில் நடைபெறுகின்றன. வவுனியா, பலாலி போன்ற இடங்களில் தொகையான காணிகள் சுவீகரிக்கப்பட்டு விமானத்தள விஸ்தரிப்புகளும், முகாம் விஸ்தரிப்புகளும் இடம்பெறுகின்றன. இவை யாவும் அகிம்சை, அன்பு, கருணை, ஜனநாயகம், சமாதானத்தை நோக்கிய செயற்பாடுகளா? அன்றி ராணுவ மயப்படுத்தலை நோக்கிய நடைமுறைகளா? என்பது இலகுவாகவே புரிந்து கொள்ளக் கூடியவையாகும். இந்தப் பாசிச வெறிபிடித்த பேரினவாத ஆட்சியின் ராணுவ மயப்படுத்தும் செயல் தனியே தமிழ் மக்களுக்கு மட்டும் எதிரானது எனக் கூறி சிங்கள மக்கள் பேசாது இருக்கமுடியாது.

தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் பேரினவாத வெறியுடன் இந்த அரசு செயல்படும் அதேவேளை வர்க்க ரீதியில் இங்குள்ள மக்களையும் விரைவிலேயே அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு தயாரிப்பாகவே ராணுவமயப் படுத்தல் இடம்பெறுகின்றன என்பது சிங்கள மக்களால் புரிந்து கொள்ளப்படுவது அவசியமாகும். சிங்கள மக்கள் இதைப் புரிந்து கொள்வதில் அதிக சிரமம் இருக்கமுடியாது. ஏனெனில் அவர்களுக்கு 1971 இன் முன் அநுபவம் இருக்கின்றது. நாடு ராணுவமயப் படுத்தப்பட்டு அடக்குமுறை யந்திரம் பலமடங்கு பலப்படுத்தப்படுவது இந்த நாட்டின் சகல மக்களுக்குமே பேராபத்தாகும். எனவே இது தமிழ் மக்களுக்கு மட்டுமானது என்ற நிலையில் நாட்டின் ஏனைய மக்கள் உண்மை புரியாது அசட்டையாக இருக்காது நாடு ராணுவமயமாக்கப் படுவதை எதிர்ப்பதற்கும் அதைத் தடுத்து நிறுத்தவுமான இயக்கத்தை நாட்டு மக்கள் அனைவரும் முன்னெடுக்க முன்வரல் வேண்டும்.

## அறிவித்தல்

### அடுத்த இதழிலிருந்து செம்பதாகை தனது பெயரை மாற்றிக்கொள்கிறது!

செம்பதாகைப் பத்திரிகை முன் அறிவித்தபடி அடுத்து வரும் இதழில் இருந்து தனது பெயரை மாற்றிக் கொள்ளப்போகின்றது. புதிய பெயரைத் தேர்ந்தெடுப்பதற்காக நூற்றுக்கு அதிகமான வாசகர்கள் பல பெயர்களை எமக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அவற்றுள் தகுதியான ஒரு பெயர் செம்பதாகைக்குப் பதிலாகத் தெரிவாகி உள்ளது. அப் பெயரில் அடுத்த பத்திரிகை உங்கள் கைகளுக்கு கிடைக்கும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். வெளிநாடுகளில் உள்ள செம்பதாகை வாசகர்களில் ஒருவரே அப் புதிய பெயரை எமக்கு அனுப்பி வைத்தவராவர். அவருக்கு எமது நன்றிகள். ஒரு வருடப் பத்திரிகை அவருக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இப் பெயர் தெரிவுக்காக தமது சிரமங்களைப் பாராது நூற்றுக்கு மேற்பட்ட பெயர்களைத் தெரிவுசெய்து அனுப்பி வைத்த வாசகர்களுக்கு நாம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். செம்பதாகை தனது பெயரை மட்டுமே மாற்றிக்கொள்கின்றது. அதன் கொள்கை லட்சியம், மக்கள் நலன் சார்ந்த நிலைப்பாடு என்பனவற்றில் புதிய பெயரில் வெளிவரும் பத்திரிகை தன் பணி தொடரும். செம்பதாகைக்கு மக்கள் கொடுத்த பேராதரவை புதிய பெயரில் வரும் பத்திரிகைக்கு தொடர்ந்தும் மக்கள் கொடுப்பார்கள் என நம்புகின்றோம். செம்பதாகை சந்தாதாரர்களுக்கு பத்திரிகை தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும்.

★ செம்பதாகை 1986 தை மாதம் முதல் அரசியல் தத்துவார்த்த காலாண்டுச் சஞ்சிகையாக வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சஞ்சிகையைப் பெறவிரும்புவோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

15/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

செம்பதாகை
நிர்வாகக் குழு,
ஆசிரியர் குழு.

# பேச்சுவார்த்தையில் தொண்டமானின் பங்கு

“காலம் கடந்தாவது ஞானம் பிறந்ததே” என்பது தவறவிட்ட உண்மையைச் சுட்டிக்காட்ட உபயோகிக்கப்படும் ஒரு முதுமொழி. ஆனால் திரு. தொண்டமான் விடயத்தில் காலம் கடப்பதற்கு முன்பே இந்திய இலங்கை அரசுகளுக்கு சிறு அளவாவது ஞானம் பிறந்திருக்கின்றது நல்லதோர் அம்சமே.

அதாவது இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தையில் திரு. தொண்டமான் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசு புறக்கணித்திருந்தது. இதை ஆமோதிப்பதுபோல் இந்திய அரசும் நடந்து கொண்டது. திரு. தொண்டமான் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளவேண்டியதன் அவசியத்தை ஒரு சிலர் மட்டுமே உணர்ந்திருந்த போதிலும் பத்திரிகைகள் தகுந்த வற்புறுத்தலைச் செய்யத் தவறிவிட்டன. பரந்த வெகுஜன அபிப்பிராயத்தை தோற்றுவிக்க மறுத்துவிட்டன. அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ‘தாயகம்’ சஞ்சிகை தனது 12வது இதழில் 02-08-85 திகதியிட்டு எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் பேச்சுவார்த்தையில் திரு. தொண்டமான் அழைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். “முஸ்லீம் மக்களின் பிரதிநிதித்துவத்தைபூட்டான் மாநாடு பெற இருப்பது நல்ல அம்சம்: அதேவேளை, திரு. தொண்டமான் பூட்டான் மாநாட்டிற்கு அழைக்கப்படாதது ஏன்? இதற்கு மூந்திய பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு வகித்தவர் தொண்டமான். அரசுதரப்பு மந்திரியாக இருந்தும், இந்திய வம்சாவழி மக்களினதும் தொழிலாளர்களினதும் தலைவர் என்ற அடிப்படையில் தமிழர் விடுதலை இயக்கங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் அவர். இந்திய வம்சாவழி மக்களினதும் குரலை அவர் பூட்டான் மாநாட்டில் கொடுக்க முடியாமல் இருப்பது வருத்தத்திற்குரியது” இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது.

இன்று திரு. தொண்டமான் இந்திய அரசினால் இலங்கை அரசு மூலமாக அழைக்கப் பட்டிருக்கிறார். இது நல்லதோர் விடயமாகும். திரு. தொண்டமான் யூ. என். பி. அரசின் அமைச்சர், அவரது வர்க்க அரசியல் நிலைப்பாடு என்பவை பற்றி எமக்கு எதுவிதக் குழப்பமும் இருக்கமுடியாது. ஆனால், இனநெருக்கடி மிக்க இன்றைய காலகட்டத்தில் பல சந்தர்ப்பங்களில் இலங்கையில் இருந்து கொண்டே நியாயமான கருத்துக்களை துணிச்சலுடன் முன்வைத்தவர். அக் கருத்துக்களில் முன்னுக்குப் பின் முரண்பட்ட நிலையைத் தோற்றுவித்தவரும் அல்ல. இலங்கையில் உள்ள அனைத்து தமிழ் மக்களின்

(6ம் பக்கம் பார்க்க)

# படுகொலைகளின் அத்திபாரங்கள்

உலகிலே ஆங்காங்கு நடைபெற்று வரும் அரசியல் படுகொலைகள் அநாகரீகமானவை என்று அடிக்கடி கண்டிக்கப்பட்டபோதிலும் அவை மீண்டும் மீண்டும் இடம் பெறவே செய்கின்றன. அதிகாரப் போட்டியும், அரசியல் குரோதப் பழிவாங்கல்களுமே அவற்றின் அடிப்படைகளாகும். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழர் அரசியல் அரங்கும் அதற்கு அப்பாற்பட்ட தொன்றல்ல. எழுபதுக்குப் பின் தமிழர் அரசியல் அரங்கிலே ஒன்றன் பின் ஒன்றாகப் பல அரசியல் படுகொலைகள் இடம்பெற்று வந்துள்ளன. அவற்றுக்கு அவ்வப்போது ஒவ்வோர் காரணம் கூறப்பட்டாலும் அவ் அரசியல் படுகொலைகள் தவறான அடிப்படைகளைக் கொண்டவை என்று பொறுப்புடையோரால் கண்டிக்கப்படவில்லை. தமிழர் தலைவர்களாக இருந்தவர்கள் தவறின் தன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறவில்லை. அதற்குப் பதிலாக உள்ளூர அத்தகைய அரசியல் படுகொலைகளுக்கு ஆசீர்வாதம் வழங்கினர். அதன்

(6ம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களின் விடுதலையும் அவர்கள் மனோநிலையும்

இலங்கையின் ஆளும் வர்க்கம் தனது இன அடக்கு முறையை உச்சநிலைக்கு உயர்த்தியுள்ளது. அண்மைக் காலங்களில் தனக்குக்கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இன அழிப்பு நடவடிக்கையாகவும் செய்து வருகின்றது, இவற்றின் மத்தியில் தமிழ் பேசும் மக்களின் விடுதலை பற்றிய பல்வேறு விதக் கருத்தோட்டங்கள் முன்வைக்கப் படுகின்றன. இவ்வாறு பல நிலைக் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதால் அவை ஒன்றுடன் ஒன்று மோதி சரியான ஒரு கருத்து நிலை உருவாகவும், அதுவே சரியான நடைமுறை உண்மைசார்ந்த கொள்கையாக உருவாகுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தவும் முடியும். ஒரு சரியான கொள்கை திடீரென ஒரு போதும் உருவாக முடியாது. அது பல்வேறு வித நடைமுறைப் பரீட்சார்த்தத்தின் மூலமே உருவாக முடியும். அவ்வாறு ஒரு சரியான கொள்கை உருவாகினாலும் அது வளர்ச்சிப்போக்கில் ஏற்படும் தீய அம்சங்களை அகற்றவும், புதிய நல்ல அம்சங்களை உள்வாங்கவும் வேண்டும். அத்தகைய நடைமுறை தான் மக்கள் நலன் சார்ந்த விடுதலையை நோக்கி முன்னேற முடியும்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் தமிழர் விடுதலை பற்றி முன்வைக்கப்படும். பல்வேறு கருத்து நிலைகளை அல்லது அவைசார்ந்த கொள்கைகளை மூன்று முக்கிய பிரிவுகளுக்குள் உள்ளடக்க முடியும். ஒன்று மிதவாதச் சீர்திருத்தம் இரண்டு அதிகாரக் கைமாற்றம். மூன்று அடிப்படையான சமுதாய மாற்றம். தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் கருத்துக்களை வகைப்படுத்தினால் இவ்வாறே கொள்ள முடியும். இத்தகைய கருத்து நிலைகள் அடிப்படையில் ஒவ்வொருவரது வர்க்க சிந்தனைகளையும் செயல் பாட்டையும் பொறுத்தே அமைய முடியும் என்பது நிராகரிக்கப் பட முடியாத ஒரு உண்மையாகும்.

முதலாவது வகையான மிதவாதச் சீர்திருத்தத்தை ஒரு கருத்து நிலையாகக் கொண்டிருப்போர் இன்றைய சூழ்நிலையில் வெளிப்படையாக அதை முன்வைக்க முடியாத நிலையில் இருந்த போதிலும், தமிழர்களுக்கு ஓரளவிற்கு உள்ள நிலையிலும் பார்க்க சில சலுகைகள் கிடைத்தால் போதுமானது என நம்புகிறார்கள். இத்தகையவர்கள் இலங்கையின் ஆளும் வர்க்கத்துடன் முரண்பட்டு நிற்பதற்கு விரும்பாதவர்கள், ஏனெனில் இவர்களது வர்க்க நலன்களில் பல ஆளும் வர்க்க நலன்களோடு ஒத்துப்போகக் கூடியவையாகும். இன்றைய சுரண்டல் தனியுடைமை அமைப்பு ஆட்டம் காணுவதையோ அல்லது சரிவதையோ விரும்பாதவர்கள் இவர்கள். உதாரணத்திற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே. ஆருக்கு வாக்களிக்கும்படி பகிரங்கமாகவும், இரகசியமாகவும் கேட்டுக்கொண்டவர்கள். மிதவாதச் சீர்திருத்தம் தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்குப் போதுமானது என்று நம்பும் வகையைச் சேர்ந்தோரேயாவர். இவர்கள் தமிழர்கள் மத்தியில் மிகவும் குறைந்த எண்ணிக்கையுடையோரேயாயினும் உடமை ரீதியிலும் அதிகாரப் பங்கிலும் அதிக செல்வாக்கைப் பெற்றவர்களாவர். இவர்கள் ஏகப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் பற்றி எவ்வித அக்கறையும் அற்றவர்கள் சாராம்சத்தில் பிற்போக்கானவர்கள் என்பதே உண்மை.

இரண்டாவது வகையான அதிகாரக் கைமாற்றல் என்ற கருத்து நிலையை முன்வைப்பவர்கள். அதாவது

**வெகுஜனன்**

தமிழர்களுக்கு தனியான ஆட்சி ஒன்றைப் பெறும் கருத்தை வலியுறுத்துவோர். இத்தகைய கருத்து தமிழ் மக்கள் மத்தியில் கணிசமானதும் மேலெழுந்தவாரியானதுமான ஆதரவைப் பெற்றுள்ளது. ஆனால் இத்தகைய தனியான ஆட்சி சாத்தியமானதா? அப்படி தனியான ஆட்சி ஏற்பட்டால் எத்தகைய ஆட்சி முறை? வெறுமனே அதிகாரக் கைமாற்றலாக மட்டும் அமையுமா? அல்லது தனியுடமை-சுரண்டல் முறைக்கு தமிழர் மத்தியில் முடிவு கட்டப்படுமா? அப்படியாயின் அத்தகைய வழிமுறைகளுக்கு இந்தியாவும் உலகின் ஏனைய பெருவல்லரசுகளும் எந்தளவுக்கு ஆதரவு வழங்கும் என்பன போன்ற அடிப்படையான பிரச்சினைகளுக்கு தெளிவான பதில்கள் கிடைக்கவில்லை. காரணம் இக் கருத்து நிலையை ஆதரிப்போரில் பல்வேறு விதமான வர்க்க சிந்தனையுடையோர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது வர்க்க நிலைக்கு ஏற்ப தமிழர்களுக்கான தனி ஆட்சிக்கு அர்த்

★ மிதவாதச் சீர்திருத்தமா?

★ அதிகாரக் கைமாற்றலா?

★ அடிப்படைச் சமுதாய மாற்றமா?

தம் கொடுக்கும் நிலையே காணப்படுகிறது. பண்டைய தமிழர்களின் பொற்காலத்தைப் நினைவு கொள்வோர் முதல் இன்றைய பொதுவுடமை நாடுகளின் ஆட்சி முறை வேண்டும் என நம்புகிறவர்கள் வரையான பல்வேறு சிந்தனைப் போக்குடையோர் இக் கருத்து நிலைக்குள் அடங்குகின்றனர். ஆனால் இக்கருத்து நிலைக்கு ஆதரவு வழங்குவோரில் பெரும்பான்மையினர் தமிழர்கள் முன்பு ஆண்டவர்கள், இடையிலே அது அற்றுப் போய்விட்டது, இப்பொழுது மீண்டும் ஆளும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு மேலெழுந்தவாரியான போக்கிலேயே உள்ளனர். அதனால் ஆட்சியதிகாரத்தை சிங்கள ஆளும் வர்க்கத்திடம் இருந்து கைமாற்ற வேண்டும் என்ற பொதுக் கருத்து நிலையில் நின்ற போதிலும் ஒரு திட்டவட்டமான கொள்கையில் ஐக்கியப்பட்ட சக்தியாக உருமாற முடியாத நிலையில் இவர்கள் இருப்பதைக் காணமுடிகிறது இதனால் ஆளும் வர்க்கத்தின் இன அடக்கு முறையாலும், இன அழிப்பு முயற்சிகளாலும் வெறுப்படைந்த தமிழ் மக்களில் பெருந்தொகையானோர் இக்கருத்தை ஆதரிக்கும் அதே வேளை நடைமுறை ரீதியில் நாளாந்தம் நம்பிக்கை இழக்கும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள்.

மூன்றாவது வகையாக உள்ள விடயம் தான் அடிப்படையான சமுதாய மாற்றம். அதாவது இந்த வகைக் கருத்தை முன்வைப்போர் தமிழர் விடுதலை என்பது ஒரு அடிப்படையான சமுதாய மாற்றத்தோடு இணைந்த ஒரு வரலாற்றுப் போக்கு என நம்புகின்றனர். இவ்வாறு நம்பிக்கையுடையோரின் எண்ணிக்கை பெரும் பான்மை என்று என்று கூறமுடியாது விட்டாலும் கணிசமான ஆதரவைப் பெறுவதோடு வளரும் சாத்தியத்தையும் அதிகம் கொண்டிருக்கின்றது. இக் கருத்தை வற்புறுத்துவோர் தமிழர் விடுதலை என்ற விடயத்தை தனியான ஒரு விடயமாகக் கொள்ளாது இலங்கையின் வரலாற்று, பூகோள, சர்வதேசிய நிலைகளோடு மட்டுமன்றி, தமிழர்களின் வர்க்க ரீதியான அடிப்படைகளோடும் வைத்து நோக்குகின்றனர். தமிழர் விடுதலை என்பது வெறும் சீர்திருத்தமோ அன்றி ஆட்சி மாற்றமோ அல்ல என்றும் அது ஒரு சமுதாய மாற்றமாக அமைய வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அதாவது கிடைக்கக்கூடிய விடுதலையானது ஏற்கனவே இறுக்கம் பெற்றுள்ள தனியுடமை—சுரண்டல் அடிப்படைகளை கொண்ட தமிழர் சமுதாயத்தில் ஒவ்வொரு வழியிலும்

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் சக்தி!

உலக வரலாறு மக்கள் சக்தியின் மகத்தான வலிமையை மீண்டும் மீண்டும் உண்மைப்படுத்தி வந்துள்ளது. கடவுள்கள், அரசர்கள், மதத் தலைவர்கள், மகான்கள், மாவீரர்கள் இன்னும் பிற தனிநபர்கள் என்போரது விஷேச ஆற்றல்களால்-ஆளுமைகளினால் மட்டும் தான் உலக வரலாறு உருவாக்கப்பட்டு வந்துள்ளது என்ற தவறான கருத்தோட்

பிற்போக்கு வர்க்கங்களும் அதன் பிரதிநிதிகளும் எப்பொழுதும் இம் மக்கள் சக்திக்கு எதிராகச் செயற்பட்டு தோல்வி அடைந்து அழிவை

மக்கள் சக்தி என்ற உறுதியான இரும்புக் கோட்டை மீது தமது மண்டைகளை மோதியவர்களாகவே இருந்தனர். அதனால் அவர்கள்

கணித்து அல்லது அதற்கு விரோதமாகச் செயல்பட்டு எவராலும் முன்னேற முடியாது. ஏனெனில் மக்கள் சக்தியானது ஒருபோதும்

கைய மக்கள் சக்தி உரிய விதத்தில் அணிதிரட்டப்பட்டு வழி நடத்தப்பட்டால் அந்த மகத்தான சக்திக்கு முன்னால் எத்தகைய ராணுவமாயினும், அல்லது நவீன ஆயுதமாகிலும் வெற்றி பெற முடியாது. இந்த உண்மை இன்றைய காலகட்டத்தில் நன்கு உணரப்படல் வேண்டும். மக்களுக்கு மேலால், மக்கள் சக்தியின் வலிமையை உதாசீனம் செய்

உண்மைசார்ந்த கொள்கையாக உருவாகுவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தவும் முடியும். ஒரு சரியான கொள்கை திடீரென ஒருபோதும் உருவாக முடியாது. அது பல்வேறு வித நடைமுறைப் பரீட்சார்த்தத்தின் மூலமே உருவாக முடியும். அவ்வாறு ஒரு சரியான கொள்கை உருவாகினாலும் அது வளர்ச்சிப்போக்கில் ஏற்படும் தீய அம்சங்களை அகற்றவும், புதிய நல்ல அம்சங்களை உள்வாங்கவும் வேண்டும். அத்தகைய நடைமுறைதான் மக்கள் நலன் சார்ந்த விடுதலையை நோக்கி முன்னேற முடியும்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் தமிழர் விடுதலை பற்றி முன்வைக்கப்படும். பல்வேறு கருத்து நிலைகளை அல்லது அவைசார்ந்த கொள்கைகளை மூன்று முக்கிய பிரிவுகளுக்குள்

ஒரு கருத்து நிலையாகக் கொண்டிருப்போர் இன்றைய சூழ்நிலையில் வெளிப்படையாக அதை முன்வைக்க முடியாத நிலையில் இருந்த போதிலும், தமிழர்களுக்கு ஓரளவிற்கு உள்ள நிலையிலும் பார்க்க சில சலுகைகள் கிடைத்தால் போதுமானது என நம்புகிறார்கள். இத்தகையவர்கள் இலங்கையின் ஆளும் வர்க்கத்துடன் முரண்பட்டு நிற்பதற்கு விரும்பாதவர்கள், ஏனெனில் இவர்களது வர்க்க நலன்களில் பல ஆளும் வர்க்க நலன்களோடு ஒத்துப்போகக் கூடியவையாகும். இன்றைய சுரண்டல் தனியுடமை அமைப்பு ஆட்டம் காணுவதையோ அல்லது சரிவதையோ விரும்பாதவர்கள் இவர்கள். உதாரணத்திற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே. ஆருக்கு வாக்களிக்கும்படி பகிரங்கமாகவும், இரகசியமாகவும் கேட்டுக்கொண்

யான அதிகாரக் கைமாற்றல் என்ற கருத்து நிலையை முன்வைப்பவர்கள். அதாவது

## வெகுஜனன்

தமிழர்களுக்கு தனியான ஆட்சி ஒன்றைப் பெறும் கருத்தை வலியுறுத்துவோர். இத்தகைய கருத்து தமிழ் மக்கள் மத்தியில் கணிசமானதும் மேலெழுந்தவாரியானதுமான ஆதரவைப் பெற்றுள்ளது. ஆனால் இத்தகைய தனியான ஆட்சி சாத்தியமானதா? அப்படி தனியான ஆட்சி ஏற்பட்டால் எத்தகைய ஆட்சிமுறை? வெறுமனே அதிகாரக் கைமாற்றலாக மட்டும் அமையுமா? அல்லது தனியுடமை-சுரண்டல் முறைக்கு தமிழர்

முறை வேண்டும் என நம்புகிறவர்கள் வரையான பல்வேறு சிந்தனைப் போக்குடையோர் இக் கருத்து நிலைக்குள் அடங்குகின்றனர். ஆனால் இக்கருத்து நிலைக்கு ஆதரவு வழங்குவோரில் பெரும்பான்மையினர் தமிழர்கள் முன்பு ஆண்டவர்கள், இடையிலே அது அற்றுப் போய்விட்டது, இப்பொழுது மீண்டும் ஆளும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு மேலெழுந்தவாரியான போக்கிலேயே உள்ளனர். அதனால் ஆட்சியதிகாரத்தை சிங்கள ஆளும் வர்க்கத்திடம் இருந்து கைமாற்ற வேண்டும் என்ற பொதுக் கருத்து நிலையில் நின்ற போதிலும் ஒரு திட்டவட்டமான கொள்கையில் ஐக்கியப்பட்ட சக்தியாக உருமாற முடியாத நிலையில் இவர்கள் இருப்பதைக் காணமுடிகிறது. இதனால் ஆளும் வர்க்கத்தின் இன அடக்கு முறையாலும்,

ரவைப் பெறுவதோடு வளரும் சாத்தியத்தையும் அதிகம் கொண்டிருக்கின்றது. இக் கருத்தை வற்புறுத்துவோர் தமிழர் விடுதலை என்ற விடயத்தை தனியான ஒரு விடயமாகக் கொள்ளாது இலங்கையின் வரலாற்று, பூகோள, சர்வதேசிய நிலைகளோடு மட்டுமன்றி, தமிழர்களின் வர்க்க ரீதியான அடிப்படைகளோடும் வைத்து நோக்குகின்றனர். தமிழர் விடுதலை என்பது வெறும் சீர்திருத்தமோ அன்றி ஆட்சி மாற்றமோ அல்ல என்றும் அது ஒரு சமுதாய மாற்றமாக அமைய வேண்டும் என்றும் கூறுகிறார்கள். அதாவது கிடைக்கக்கூடிய விடுதலையானது ஏற்கனவே இறுக்கம் பெற்றுள்ள தனியுடமை—சுரண்டல் அடிப்படைகளைக் கொண்ட தமிழர் சமுதாயத்தில் ஒவ்வொரு வழியிலும்

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் சக்தி!

உலக வரலாறு மக்கள் சக்தியின் மகத்தான வலிமையை மீண்டும் மீண்டும் உண்மைப்படுத்தி வந்துள்ளது. கடவுள்கள், அரசர்கள், மதத் தலைவர்கள், மகான்கள், மாவீரர்கள் இன்னும் பிற தனிநபர்கள் என்போரது விஷேச ஆற்றல்களால்-ஆளுமைகளினால் மட்டும் தான் உலக வரலாறு உருவாக்கப்பட்டு வந்துள்ளது என்ற தவறான கருத்தோட்டத்தை மாக்சிச தத்துவமே தகர்த்தெறிந்தது. அது தனது உயர்ந்த சமூக விஞ்ஞான ஆராய்வின் மூலம் மனிதகுல வரலாற்றில் மக்கள் சக்தி வகித்து வந்த மாபெரும் பாத்திரத்தை ஆதாரபூர்வமாக உலகுக்கு உணர்த்தியது. மாக்ஸ் முதல் மாஓசேதுங் வரையான மாக்சிச மாமேதைகள் மக்கள் சக்தியின் மகத்தான வரலாற்று முக்கியத்துவத்தை நடைமுறை அநுபவங்களிலிருந்து எடுத்துக் காட்டினர். பழைய சகாப்தங்களில் இடம்பெற்ற சமுதாய மாற்றங்களின் போது மக்கள் சக்தி வகித்த பாத்திரத்தின் தன்மையை இன்றையசகாப்தத்தில் இடம் பெற்ற மாபெரும் அக்டோபர் புரட்சி, அதைத் தொடர்ந்து இடம்பெற்ற புகழ் மிக்க சீனப் புரட்சி போன்ற போன்ற சமுதாய மாற்றத்திற்கான புரட்சிப் பேரலைகளின் மூலமாகக் கொள்ள முடிந்தது.

இவ்வாறு மக்கள் சக்திதான் மாபெரும் சக்தி என்ற வரலாற்று அநுபவத்தை அறிந்துகொள்ள முடியாத பிற்போக்கு வர்க்கங்களும் அதன் பிரதிநிதிகளும் எப்பொழுதும் இம் மக்கள் சக்திக்கு எதிராகச் செயற்பட்டு தோல்வி அடைந்து அழிவையே தேடிக் கொண்டனர். இத்தகைய பிற்போக்குச் சக்திகள் மக்களை ஒரு பொருட்டாக, வரலாற்றை உருவாக்கும் சக்தியாக ஏற்றுக்கொண்டதில்லை. பதிலுக்கு தமது ஆளும் வர்க்க அதிகார வெறியை சொத்துடமையை, ஆயுதங்களை வெகுவாகவும் உயர்வாகவும் மதித்துப் போற்றினர். இவற்றைக் கொண்டு மக்களை அடக்கி ஒடுக்கி ஆளலாம். என்றே மனப்பால் குடித்து வந்தனர். இவர்கள் மக்கள் சக்தி என்ற உறுதியான இரும்புக் கோட்டை மீது தமது மண்டைகளை மோதியவர்களாகவே இருந்தனர். அதனால் அவர்கள் தோல்விகளைத் தேடிக்கொண்டனர்.

ஆனால் மக்கள் சக்தியின் எல்லையற்ற வலிமையை புரிந்துகொண்டு அதற்கு உயர்ந்த மதிப்புக்கொடுத்த வர்க்க சக்திகளும், அதன் பிரதிநிதிகளும் வரலாற்றில் மீண்டும் மீண்டும் வெற்றிகளையே பெற்றுக்கொண்டனர்.

எந்த ஒரு நாட்டிலும் மக்கள் சக்தியை புறக்கணித்து அல்லது அதற்கு விரோதமாகச் செயல்பட்டு எவராலும் முன்னேற முடியாது. ஏனெனில் மக்கள் சக்தியானது ஒருபோதும் தவறானவற்றையும், தமக்கு விரோதமானவற்றையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. அது தவறைத் தவறு எனவும், சரியைச் சரியெனவும் எடுத்துக்காட்டியே தீரும். அதேபோல் மக்கள் சக்தியை எவரும் ஏமாற்றிவிடவும் முடியாது.

எனவே மக்கள் தான் உலகின் வலிமை மிக்க சிருஷ்டிகர்த்தாக்களாவர். அத்தகைய மக்கள் சக்தி உரிய விதத்தில் அணிதிரட்டப்பட்டு வழி நடத்தப்பட்டால் அந்த மகத்தான சக்திக்கு முன்னால் எத்தகைய ராணுவமாயினும், அல்லது நவீன ஆயுதமாகிலும் வெற்றி பெற முடியாது. இந்த உண்மை இன்றைய காலகட்டத்தில் நன்கு உணரப்படல் வேண்டும். மக்களுக்கு மேலால், மக்கள் சக்தியின் வலிமையை உதாசீனம் செய்வோரால் ஒருபோதும் சிறப்பான எதிர்காலத்தை சந்திக்க முடியாது.

ஒருவர் மக்கள் சக்தியின் உண்மைத் தன்மையைக் காணவிரும்பினால் அவர் மக்கள் மத்திக்குச் செல்லவேண்டும். அங்கே பொறுமையாகவும், நிதானமாகவும் மக்களின் தேவைகள், அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாகவும் ஏற்பநடந்து மக்களின் நம்பிக்கையைப் பெற்றால் மட்டுமே மக்கள் சக்தியைப் படிப்படியாக உணரமுடியும். அல்லாவிடில் மக்களை மந்தைகளாகவும். அறிவற்றவர்களாகவும் கற்பனை செய்துகொண்டு மக்களிடம் இருந்து பிரிந்து இறுதியில் மக்களுக்கு விரோதமாகச் சென்று மக்கள் சக்தியோடு விரோதிக்கும் நிலைக்கே தள்ளப்படுவர். அப்பொழுது தோல்வியே அவர்களைத் தழுவும்.

## மக்களும் பிற்போக்குச் சக்திகளும்

தொல்லை கொடுப்பது, தோல்வி அடைவது, மீண்டும் தொல்லை, மீண்டும் தோல்வி...... தமது அழிவு வரை; இது மக்களின் லட்சியத்தைக் கையாள்வதில் ஏகாதிபத்தியவாதிகளும் உலகில் உள்ள எல்லாப் பிற்போக்கு வாதிகளும் மேற்கொள்ளும் தர்க்கம். அவர்கள் ஒருபோதும் இந்தத் தர்க்கத்திற்கு விரோதமாகச் செல்லமாட்டார்கள். இது ஒரு மாக்சிச விதி. ஏகாதிபத்திய வாதிகள் தாம் அழியும்வரை ஒருபோதும் கசாப்புக்கடைக் கத்திகளை கீழே போடமாட்டார்கள், ஒருபோதும் புத்தர்களாக மாற மாட்டார்கள்.

போராட்டம், தோல்வி, மீண்டும் போராட்டம், மீண்டும் தோல்வி, மீண்டும் போராட்டம்... தமது வெற்றிவரை; இதுதான் மக்களின் தர்க்கம். அவர்களும் இந்தத் தர்க்கத்திற்கு எதிராகச் செல்லமாட்டார்கள், இது இன்னொரு மாக்சிச விதி.

— மாஓசேதுங்

# ஏகாதிபத்தியம் என்றால் என்ன?

**ஒரு கேள்வியும் பதிலும்**

★ ★ ★ அவதானி

சோஷலிஸம் என்ற சொல் அரசியல் பித்தலாட்டக்காரர்களால் அர்த்தம் திரித்து வழங்கப்படுகிறது. ஆனால் ஏகாதிபத்தியம் என்ற சொல் அதன் அர்த்தம் தெரியாமை காரணமாகவே பலராலும் தவறாக விளங்கிக்கொள்ளப் பட்டுள்ளது. அது ஒரு ஏச்சு வார்த்தை என்ற அளவுக்கு மேல் அதன் அர்த்தம் பற்றி நம் தேசியவாதிகள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. சிங்கள ஏகாதிபத்தியம் என்ற சொற்றொடரை வெற்றிகரமாகப் பிரயோகிக்க தமிழ்ப் பிற்போக்குத் தலைமைக்கு இன்னுங்கூட இயலுமாக இருக்கிறது என்பதால் ஏகாதிபத்தியம் என்பது எதனைக் குறிக்கிறது என்று தெளிவு படுத்துவது பயனுள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் என்ற சொல்லை நாம் அறிவோம். ஆனால் அதை நம்முட் பலர் பிரித்தானிய கொலனித்துவத்துடன் குழப்பிக் கொண்டுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் என்றதும் அதன் ஆக்கிரமிப்பு யுத்தங்களும் அயல்நாடுகளுடன் மீதான நேரடி ஆதிக்கமும் மனதுக்கு வருவதால் பலர் ஏகாதிபத்தியத்தை ஆக்கிரமிப்புடனும் மேலாதிக்கத்துடனும் குழப்பிக் கொள்கிறார்கள். எனவே இன ஒடுக்கல், ராணுவத்தின் அடக்குமுறை ஆகியனவற்றை ஏகாதிபத்தியம் என்று அடையாளங் காட்டும்போது அதை எளிதாக நம்ப இயலுமாகி விடுகிறது.

ஏகாதிபத்தியம் என்பது மாக்ஸிஸ—லெனினிஸ வழக்கில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியடைந்த கட்டத்தையே குறிக்கிறது, மாக்ஸ் தன் வாழ்நாளில் கண்டது அடிப்படையான முதலாளித்துவ முறையின் வளர்ச்சியின் ஒரு உச்சம். அது தொடர்ந்து ஏகாதிபத்தியமாக மாறிய கட்டத்தை லெனின் தெளிவாக அடையாளம் காட்டினார். மாக்ஸ் முதலாளித்துவம் தொடர்ந்தும் சுதந்திரமான போட்டியின் அடிப்படையில் இயங்கமுடியாமை பற்றியும் அதன் நெருக்கடி பற்றியும் கூறினார். அதன் தொடர்ச்சியான ஏகாதிபத்திய குண இயல்புகளை லெனின் மிகவும் தெளிவாகக் அடையாளங் காட்டினார். ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமும் முதலாளித்துவ முறையின் பலவீனத்தின் வெளிப்பாடும் (அதாவது அது மரணத்தின் வாயிலில் நிற்கும் முதலாளித்துவம்) என்று சுட்டிக்காட்டினார். ஏகாதிபத்தியம் என்பதை அவர் ஏகபோக முதலாளித்துவம் என்று அடையாளங் காட்டினார். எனவே மேலாதிக்கம், ஆக்கிரமிப்பு, முதவாளித்துவ நாடுகளிடையிலான யுத்தங்கள் ஆகியன முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக, ஏகாதிபத்தியமாக வளர்ந்ததன் வெளிப்பாடுகளே ஒழிய அவையே ஏகாதிபத்தியமாகிவிட மாட்டா.

ஏகாதிபத்தியம் ஏன் உருவாக வேண்டி நேர்ந்தது? முதலாளித்துவம் ஒரு புல்லுருவிச் சமுதாய முறை. அது தன் வளர்ச்சிக்கு தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டவும் தனக்குப் போட்டியாகவுள்ள சக்திகளை நசுக்கவும் அவசியமாகிறது. அதன் லாப நோக்கமும் அதிகார வேட்கையும் முதலாளித்துவத்துள்ளேயே போட்டா போட்டிகளை ஊக்குவிக்கிறது. எனவே பெரிய முதலாளிகள் சிறு உற்பத்தியாளர்களையும் வியாபாரிகளையும் நசுக்கவும் தம்முடனான போட்டியினின்று ஒதுக்கவும் முதலில் நேருகிறது. மறுபுறம் ஒருவருடன் ஒருவரின் போட்டி அவர்கள் கொள்ளைலாபம் அடிப்பதை ஓரளவு தடுப்பதால் சந்தையை முடிந்தவரை தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரவே எந்த ஒரு பெரிய முதலாளித்துவ நிறுவனமும் முற்படுகிறது. இதன் விளைவாகப் பெரு முதலாளித்துவம் ஒரு ஏகபோக சக்தியாக வளர்கிறது. மறுபுறம் தேசிய எல்லைகட்குள் தன் பெருகி வரும் உற்பத்திக்குச் சந்தைகளை விரித்துக்கொள்ள இயலாது போவதால் தேசிய எல்லைகட்கு வெளியே சந்தைகளைத் தேடும் நிர்ப்பந்தம் உருவாகிறது. உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருள்களை பிறநாடுகளினின்று மலிவான விலையில் வாங்கவும் அவை மலிவாக நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தும் கிடைப்பதை உத்தரவாதம் செய்யவும் தேவை ஏற்படுகிறது. இவை ஒருபுறம் முதலாளித்துவ நாடுகளிடையே போட்டிகளையும் மோதல்களையும் மறுபுறம் பின்தங்கிய நாடுகள் மீது ஆதிக்கத்தைச் செலுத்தும் சூழ்நிலையையும் ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக கொலனித்துவ முறையிலும் அது அது சாத்தியமில்லாத இடத்தில் நவகொலனித்துவ முறையிலும் பின்தங்கிய நாடுகளைத் தம் அதிகாரத்துக்கு உட்படுத்தப் பெருமுதலாளித்துவ சக்திகள் தம் தேசத்தின் ஆட்சியாளர்களின் துணையுடன் செயற்படுகின்றன. இந்தவிதமான ஆதிக்கத்துக்கான போட்டியே அவர்களிடையே கழுத்தறுப்புக்கும் உலக யுத்தத்துக்கும் வழிகோலியது.

மூலதனத்தின் வரலாற்று வளர்ச்சி அதிகாரத்தை நேரடியாக உற்பத்தியுடன் தொடர்புடையவர்களின் கையிலேயே விட்டுவிடுவதில்லை. வங்கிகள் போன்ற நிதி ஸ்தாபனங்கள் மீதும், தரகு நிறுவனங்கள் போன்றனவற்றின் ஆதிக்கம் காலப்போக்கில் வளர்கிறது. இதன் மூலமாக உற்பத்தித் துறைசார்ந்த, வளர்ச்சியடையாத முதலாளித்துவ சக்திகள் முதலீடு, சந்தைப்படுத்தல், போக்குவரத்து, விநியோகம் போன்ற தேவைகளால் தரகர்கள் மீதும் நிதி நிறுவனங்கள் மீதும் மேலும் மேலும் தங்கியிருக்கவும் அவர்களது இரும்புப் பிடியினின்று மீள முடியாமலும் நேருகிறது. இதன் விளைவாக முதலாளித்துவ உலகின் பொருளாதார பலம் மிகவும் குறுகிய ஒரு வட்டத்தின் கைக்குள் ஒடுங்கி விடுகிறது. பெரு முதலாளித்துவம் தன் தேசிய எல்லைக்கு வெளியிலும் (மூலதனத்தின் ஏற்றுமதி மூலம்) தன் போட்டியாளர்களை மேலும் மேலும் நசுக்குகிறது.

இவ்வாறான அதிகார வளர்ச்சி ஸ்திரமான ஒரு நிலையை ஏற்படுத்துவதில்லை. ஏகாதிபத்தியத்தின் மீது வெறுப்புணர்ச்சி பல வேறு மட்டங்களிலும் உருவாகி வளர்கிறது. ஏகாதியபத்தியம் தன் நலன் கருதி வளர்க்கும் தேசியவாத உணர்வுகள் ஏகாதிபத்திய நாடுகளிடையே உள்ள முரண்பாடுகளை வளர்ப்பதோடு மறுபுறம் பின்தங்கிய நாடுகளில் உள்ள முதலாளித்துவ சக்திகளுடனும் ஏற்கனவே உள்ள முரண்பாடுகளை ஊக்குவிக்கிறது. ஏகாதிபத்தியம் மூலதனத்தைத் தேசிய எல்லைகட்கு வெளியே அனுப்பிய தன் மூலம் தன் பிரச்சினையை குறுகிய கால அளவில் திசை திருப்பி, முதலாளித்துவ முறையின் வாழ்நாளை நீடித்துவிட்டதுபோல் தோன்றினாலும் உண்மையில் இத் திசைதிருப்பல் ஏகாதிபத்தியத்தினது பிரச்சனையை சர்வதேச அரங்கிற்கு விஸ்தரித்ததன் மூலம் அதன் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தி உலகு முழுவதும் முதலாளித்துவ முறை முற்றாகவே ஒழிக்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலையையும் உண்டாக்கிவிட்டது. எகாதிபத்தியம் தவிர்க்க முடி முடியாமலே பல்வேறு நாடுகளிலும் அதிகாரத்தில் உள்ள தீய, மக்கள் விரோத சக்திகளுடன் கூட்டுச் சேரும் நிர்ப்பந்தம் அது எவ்வளவு தூரம் தனிமைப் படுத்தப்பட்டும் பலவீனமடைந்தும் உள்ளது என்பதையே காட்டுகிறது. அது கையாளும் யுத்த மிரட்டல்களும், சதிவேலைகளும், ஆக்கிரமிப்பும், அடக்குமுறைகளும் அதன் அழிவின் அறிகுறிகளே ஒழிய அதன் வலிமையின் அடையாளங்கள் அல்ல. சுருக்கமாகச் சொன்னால் முதலாளித்துவத்தின் ஒரு சீரற்ற வளர்ச்சியும் அதன் புல்லுருவித்தன்மையும், அதன் தேசிய நெருக்கடியும் அதனை ஏகாதிபத்தியமாக வளர்த்துவிட்டன. மூலதனத்தின் ஏற்றுமதி, நிதி ஸ்தாபனங்களின் அதிகாரம், பின்தங்கிய நாடுகளின் சந்தைகளின் மீதும் மூலப் பொருட்கள் மீதும் மலிவான உழைப்பு சக்தியின் மீதும் ஆதிக்கம் என்பன ஏகாதிபத்தியத்தின் அடையாளங்கள் இவற்றை நிலைநிறுத்தப் பல வேறு மட்டங்களிலும் ஆயுதப் பெருக்கம், நாடுகளிடையேயும் நாடுகளினுள்ளும் ஏற்றுமதி, பிறநாடுகளின் அரசியலில் குறுக்கீடு ஆகியன அவசியமாகிவிடுகின்றன. இவையே இறுதியில் ஏகாதிபத்தியத்தின் அழிவுக்கு காரணமாகின்றன. அந்த அழிவைத் துரிதப் படுத்துவதற்கு ஒடுக்கப்பட்ட சகல நாடுகளினதும் மக்களினதும் ஐக்கியம் அவசியம். இதனாலேயே பாட்டாளிவர்க்கப் புரட்சி இவ்வாறான ஐக்கியத்தை வலியுறுத்தி ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்களிடையே பகைமை உணர்வுகள் வளர்வதை எதிர்த்து நிற்கிறது. ★

திகரமாகப் பிரயோகிக்க
தமிழ்ப் பிற்போக்குத் தலை
மைக்கு இன்னுங்கூட இயலு
மாக இருக்கிறது என்பதால்
ஏகாதிபத்தியம் என்பது எத
னைக் குறிக்கிறது என்று
தெளிவு படுத்துவது பய
னுள்ளது. பிரித்தானிய ஏகா
திபத்தியம் என்ற சொல்லை
நாம் அறிவோம். ஆனால்
அதை நம்முட் பலர் பிரித்தா
னிய கொலனித்துவத்துடன்
குழப்பிக் கொண்டுள்ளனர்.
அமெரிக்க ஏகாதிபத்தியம்
என்றதும் அதன் ஆக்கிரமிப்பு
யுத்தங்களும் அயல்நாடுகளு
டன் மீதான நேரடி ஆதிக்
கமும் மனதுக்கு வருவதால்
பலர் ஏகாதிபத்தியத்தை ஆக்
கிரமிப்புடனும் மேலாதிக்கத்
துடனும் குழப்பிக் கொள்
கிறார்கள். எனவே இன ஒடுக்
கல், ராணுவத்தின் அடக்கு
முறை ஆகியனவற்றை ஏகாதி
பத்தியம் என்று அடையாளங்
காட்டும்போது அதை எளி
தாக நம்ப இயலுமாகி விடு
கிறது.

ஏகாதிபத்தியம் என்பது
மாக்ஸிஸ—லெனினிஸ வழக்
கில் முதலாளித்துவத்தின்
வளர்ச்சியடைந்த கட்டத்
தையே குறிக்கிறது, மாக்ஸ்
தன் வாழ்நாளில் கண்டது
அடிப்படையான முதலாளித்
துவ முறையின் வளர்ச்சியின்
ஒரு உச்சம். அது தொடர்ந்து
ஏகாதிபத்தியமாக மாறிய
கட்டத்தை லெனின் தெளி

ணத்தின் வாயிலில் நிற்கும்
முதலாளித்துவம்) என்று
சுட்டிக்காட்டினார். ஏகாதி
பத்தியம் என்பதை அவர்
ஏகபோக முதலாளித்துவம்
என்று அடையாளங் காட்டி
னார். எனவே மேலாதிக்கம்,
ஆக்கிரமிப்பு, முதலாளித்துவ
நாடுகளிடையிலான யுத்தங்
கள் ஆகியன முதலாளித்து
வம் ஏகபோக முதலாளித்
துவமாக, ஏகாதிபத்தியமாக
வளர்ந்ததன் வெளிப்பாடு
களே ஒழிய அவையே ஏகாதி
பத்தியமாகிவிட மாட்டா.
ஏகாதிபத்தியம் ஏன் உருவாக
வேண்டி நேர்ந்தது? முதலா
ளித்துவம் ஒரு புல்லுருவிச்
சமுதாய முறை. அது தன்
வளர்ச்சிக்கு தொழிலாளரின்
உழைப்பைச் சுரண்டவும்
தனக்குப் போட்டியாகவுள்ள
சக்திகளை நசுக்கவும் அவசிய
மாகிறது. அதன் லாப
நோக்கமும் அதிகார வேட்
கையும் முதலாளித்துவத்துள்
ளேயே போட்டா போட்டி
களை ஊக்குவிக்கிறது. எனவே
பெரிய முதலாளிகள் சிறு
உற்பத்தியாளர்களையும் வியா
பாரிகளையும் நசுக்கவும் தம்
மூடனான போட்டியினின்று
ஒதுக்கவும் முதலில் நேருகி
றது. மறுபுறம் ஒருவருடன்
ஒருவரின் போட்டி அவர்கள்
கொள்ளைலாபம் அடிப்பதை
ஓரளவு தடுப்பதால்சந்தையை
முடிந்தவரை தன் ஆதிக்கத்
திற்குள் கொண்டுவரவே
எந்த ஒரு பெரிய முதலாளித்

காலத்திற்குத் தொடர்ந்தும்
கிடைப்பதை உத்தரவாதம்
செய்யவும் தேவை ஏற்படு
கிறது. இவை ஒருபுறம் முத
லாளித்துவ நாடுகளிடையே
போட்டிகளையும் மோதல்
களையும் மறுபுறம் பின்தங்
கிய நாடுகள் மீது ஆதிக்
கத்தைச் செலுத்தும் சூழ்நிலை
யையும் ஏற்படுத்துகின்றன.
இதன் விளைவாக கொலனித்
துவ முறையிலும் அது அது
சாத்தியமில்லாத இடத்தில்
நவகொலனித்துவ முறை
யிலும் பின்தங்கிய நாடுகளைத்
தம் அதிகாரத்துக்கு உட்
படுத்தப் பெருமுதலாளித்
துவ சக்திகள் தம் தேசத்தின்
ஆட்சியாளர்களின் துணையு
டன் செயற்படுகின்றன.
இந்தவிதமான ஆதிக்கத்துக்
கான போட்டியே அவர்களி
டையே கழுத்தறுப்புக்கும்
உலக யுத்தத்துக்கும் வழி
கோலியது.

மூலதனத்தின் வர
லாற்று வளர்ச்சி அதிகாரத்
தை நேரடியாக உற்பத்தி
யுடன் தொடர்புடையவர்
களின் கையிலேயே விட்டு
விடுவதில்லை. வங்கிகள்
போன்ற நிதி ஸ்தாபனங்கள்
மீதும், தரகு நிறுவனங்கள்
போன்றனவற்றின் ஆதிக்கம்
காலப்போக்கில் வளர்கிறது.
இதன் மூலமாக உற்பத்தித்
துறைசார்ந்த, வளர்ச்சியடை
யாத முதலாளித்துவ சக்தி
கள் முதலீடு, சந்தைப்படுத்

யாளர்களை மேலும் மேலும்
நசுக்குகிறது.

இவ்வாறான அதிகார
வளர்ச்சி ஸ்திரமான ஒரு
நிலையை ஏற்படுத்துவதில்லை.
ஏகாதிபத்தியத்தின் மீது
வெறுப்புணர்ச்சி பல வேறு
மட்டங்களிலும் உருவாகி
வளர்கிறது. ஏகாதிபத்தியம்
தன் நலன் கருதி வளர்க்கும்
தேசியவாத உணர்வுகள்
ஏகாதிபத்திய நாடுகளி
டையே உள்ள முரண்பாடு
களை வளர்ப்பதோடு மறு
புறம் பின்தங்கிய நாடுகளில்
உள்ள முதலாளித்துவ சக்தி
களுடனும் ஏற்கனவே உள்ள
முரண்பாடுகளை ஊக்குவிக்
கிறது. ஏகாதிபத்தியம் மூல
தனத்தைத் தேசிய எல்லை
கட்கு வெளியே அனுப்பிய
தன் மூலம் தன் பிரச்சினையை
குறுகிய கால அளவில் திசை
திருப்பி, முதலாளித்துவ
முறையின் வாழ்நாளை நீடித்
துவிட்டதுபோல் தோன்றி
னாலும் உண்மையில் இத்
திசைதிருப்பல் ஏகாதிபத்தி
யத்தினது பிரச்சனைய சர்வ
தேச அரங்கிற்கு விஸ்தரித்
ததன் மூலம் அதன் வீழ்ச்சி
யைத் துரிதப்படுத்தி உலகு
முழுவதும் முதலாளித்துவ
முறை முற்றாகவே ஒழிக்கப்
படுவதற்கான ஒரு சூழ் நிலை
யையும் உண்டாக்கிவிட்டது.
எகாதிபத்தியம் தவிர்க்க முடி
முடியாமலே பல்வேறு நாடு
களிலும் அதிகாரத்தில் உள்ள

சொன்னால் முதலாளித்துவத்
தின் ஒரு சீரற்ற வளர்ச்சியும்
அதன் புல்லுருவித்தன்மை
யும், அதன் தேசிய நெருக்
கடியும் அதனை ஏகாதிபத்திய
மாக வளர்த்துவிட்டன. மூல
தனத்தின் ஏற்றுமதி, நிதி
ஸ்தாபனங்களின் அதிகாரம்,
பின்தங்கிய நாடுகளின் சந்தை
களின் மீதும் மூலப் பொருட்
கள் மீதும் மலிவான உழைப்பு
சக்தியின் மீதும் ஆதிக்கம்
என்பன ஏகாதிபத்தியத்தின்
அடையாளங்கள் இவற்றை
நிலைநிறுத்தப் பலவேறு மட்
டங்களிலும் ஆயுதப் பெருக்
கம், நாடுகளிடையேயும்
நாடுகளினுள்ளும் ஏற்றுமதி,
பிறநாடுகளின் அரசியலில்
குறுக்கீடு ஆகியன அவசிய
மாகிவிடுகின்றன. இவையே
இறுதியில் ஏகாதிபத்தியத்
தின் அழிவுக்கு காரணமா
கின்றன. அந்த அழிவைத்
துரிதப் படுத்துவதற்கு ஒடுக்
கப்பட்ட சகல நாடுகளினதும்
மக்களினதும் ஐக்கியம் அவ
சியம். இதனாலேயே பாட்
டாளிவர்க்கப் புரட்சி இவ்வா
றான ஐக்கியத்தை வலியுறுத்தி
ஒடுக்கப்பட்ட நாடுகளின்
மக்களிடையே பகைமை
உணர்வுகள் வளர்வதை
எதிர்த்து நிற்கிறது. ★

# கறுப்பு அமெரிக்க மக்களின் போராட்டம் பற்றி மாஓ

1968 ஏப்—16

சமீபத்தில், ஆப்ரோ-
அமெரிக்க மதகுருவான மாட்
டின் லூதர் கிங், திடீரென
அமெரிக்க ஏகாதிபத்தியவாதி
களால் கள்ளத்தனமாகக்
கொலை செய்யப்பட்டார்.
மாட்டின் லூதர் கிங் ஒரு
அஹிம்சாவாதி. இருப்பினும்
அமெரிக்க ஏகாதியத்தியவாதி
கள் இதற்காக அவர்மீது எவ்
வித சகிப்புத்தன்மையும்
காட்டவில்லை. மாறாக, எதிர்-
புரட்சி பலாத்காரத்தைப்
பாவித்து, அவரை ஈவிரக்க
மின்றி கொலை செய்தார்கள்.
இது, அமெரிக்காவின் பரந்து
பட்ட கறுப்பு மக்களுக்கு
ஆழ்ந்த படிப்பினை ஒன்றைப்
போதித்துள்ளது. இது,
பலாத்கார அடக்குமுறைக்கு
எதிரான அவர்களின் போ
ராட்டத்தில் புதிய புயல்
ஒன்றை எழுப்பியுள்ளது. இப்
புயல் அமெரிக்காவின் நூற்
றுக்கு மேலான நகரங்களில்
பரவி அடிக்கின்றது. இது
போன்ற புயல் அமெரிக்க
வரலாற்றில் முன் ஒருபோ
தும் நிகழ்ந்ததில்லை. இரண்டு
கோடிக்கு மேலான ஆப்ரோ
-அமெரிக்கர் மத்தியில் ஆற்

றல் மிக்க புரட்சி சக்தி உட்
செறிந்திருக்கின்றது என்பதை
இது காட்டுகின்றது.

அமெரிக்காவில் நிகழும்
ஆப்ரோ - அமெரிக்கரின் இப்
போராட்டப் புயல், இப்
பொழுது அமெரிக்க ஏகாதி
பத்தியத்தைப் பீடித்துள்ள
முழு அரசியல் பொருளாதார
நெருக்கடிகளின் ஒரு குறிப்
பிடத்தக்க வெளிப்பாடாகும்.
உள்நாட்டிலும் வெளிநாட்டி
லும் கஷ்டங்களில் சிக்கிய
அமெரிக்க ஏகாதிபத்தியத்
துக்கு இது பலத்த அடி
கொடுத்துள்ளது.

ஆப்ரோ - அமெரிக்கரின்
போராட்டம் சுரண்டப்பட்டு

அடக்கி ஒடுக்கப்படும் கறுப்பு
மக்கள், சுதந்திரத்துக்காக
வும் விடுதலைக்காகவும் நடத்
தும் போராட்டம் மாத்திர
மல்ல; சுரண்டப்பட்டு
அடக்கி ஒடுக்கப்படும் அமெ
ரிக்க மக்களனைவருக்கும் ஏக
போக முதலாளி வர்க்கத்தின்

## தோழர் மாஓ சேதுங் அவர்கள் மறைந்த 9வது வருட நினைவாக

கொடூர ஆட்சிக்கு எதிராகப்
போராடும்படி விடுக்கப்பட்ட
புதிய சங்கநாதமுமாகும்.
அனைத்துலக மக்களின் அமெ
ரிக்க ஏகாதியத்திய - எதிர்ப்பு

போராட்டத்துக்கும், வியட்
நாம் மக்களின் அமெரிக்க
ஏகாதிபத்திய- எதிர்ப்பு
போராட்டத்துக்கும், இது
பிரமாண்டமான உதவியும்
ஊக்கமுமாகும். நான் சீன
மக்கள் சார்பில், ஆப்ரேர-
அமெரிக்கரின் நீதியான
போராட்டத்துக்கு இத்தால்
உறுதியான ஆதரவைத் தெரி
விக்கின்றேன்.

அமெரிக்காவின் இனப்
பாகுபாடு, காலனிச ஏகாதி
பத்திய அமைப்புமுறையின்
படைப்பு. அமெரிக்காவின்
பரந்துபட்ட கறுப்பு மக்களுக்
கும் அமெரிக்க ஆளும் வட்
டாரங்களுக்கு மிடையிலுள்ள
முரண்பாடு, வர்க்க முரண்

பாடாகும். அமெரிக்க ஏக
போக முதலாளி வர்க்கத்தின்
பிற்போக்கு ஆட்சியைத் தூக்
கியெறிந்து, காலனிச ஏகாதி
பத்திய அமைப்பு முறையை
நொறுக்குவதன் மூலம் தான்,
ஆப்ரோ - அமெரிக்கர் பூரண
விடுதலையைப் பெற முடியும்.
அமெரிக்காவின் பரந்துபட்ட
கறுப்பு மக்களுக்கும் அமெ
ரிக்க வெள்ளையர்கள் மத்தியி
லுள்ள பரந்து பட்ட உழைப்
பாளி மக்களுக்கும் பொது
நலன்களும் பொதுப் போரா
ட்டக் குறிக்கோள்களும்
உண்டு. எனவே, ஆப்ரோ-
அமெரிக்கரின் போராட்டம்
மென்மேலும் அதிகப்படி
யான அமெரிக்க வெள்ளையர்
கள் மத்தியிலுள்ள உழைப்
பாளி மக்களிடமிருந்தும் முற்
போக்கு வாதிகளிடமிருந்தும்
அனுதாபமும் ஆதரவும்
பெறுகின்றது. ஆப்ரோ-
அமெரிக்கரின் போராட்டம்
அமெரிக்க தொழிலாளர்
இயக்கத்துடன் இணைந்து
இறுதியில் அமெரிக்க ஏக
போக முதலாளி வர்க்கத்தின்
கொலைபாதக ஆட்சிக்கு முற்

(5ம் பக்கம் பார்க்க)

# தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள்!

தமது நியாயபூர்வமான உரிமைகளை கேட்டு நிற்கும் மக்கள் எவராகிலும் அவர்களுக்கு எதிராகத் தனது கொடிய அடக்கு முறைகளை பல்வேறு வழிகளில் கட்டவிழ்த்து விடுவதையே இன்றைய அரசு தொழிலாகக் கொண்டுள்ளது. அதற்குக் காரணம் இன்றைய சூழலில் தனது அதிகாரத்தையும் ஆயுத பலத்தையும் கொண்டு மக்களை அவர்கள் எவராக இருப்பினும் அடக்கி அமர்த்தி விடவேண்டும் என்பதேயாகும்.

தமிழ் பேசும் மக்களின் ஒரு பிரிவினரான இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான பல கோரிக்கைகளை தமது உரிமைகளைப் பெறுவதற்காக முன் வைத்து நிற்கும் மக்களாவர். பொருளாதாரக் கோரிக்கைகள் மட்டுமன்றி அடிப்படை மனித ஜீவாதாரப் பிரச்சனைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளும் பிரதானமானவையாக உள்ளன. அவைகள் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. முற்றாக மறுக்கப்பட்டன, தட்டிக் கழிக்கப்பட்டன. அல்லது அற்ப சொற்பமாக வழங்கப்பட்டன, இதனால் தோட்டத் தொழிலாளர்கள் இந்த ஆட்சியின்மீது விரக்தியும் வெறுப்பும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தியும் வருகிறார்கள்.

ஆதலால் இத்தகைய மக்களை பல்வேறு காரணங்களைக் காட்டி அடக்கிவிடும் முயற்சிகள் அரச பக்கத்தில் இருந்து செய்யப்படுகிறது. இனவாத வன்செயல்களை இந்த மக்களுக்கு எதிராகக் காலத்திற்குக் காலம் தூண்டிவிடுவதும், மலையக மக்கள் ‘மலை நாடு’ கோருகிறார்கள் என்ற கட்டுக் கதைகளைப் பரப்பி அதன் மூலம் தமது பேரினவாதப் பசிக்குஇரை தேடுவதுமாகசில சக்திகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் மலையகத்தில் இளைஞர்கள் பரவலாகப் ‘பயங்கரவாதிகள்’ என்ற பெயரில் கைது செய்யப்படுவதும், மோசமான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுவதும் இடம் பெறுகின்றன. மலையகத்தின் கிராமப்புறச் சிங்கள மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மிடையில் திட்டமிட்ட மோதல்களை உருவாக்குவதும் அதனால் தோட்ட லயன்கள் தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டு தீயிடப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. சுயநலத்தையும் சுயலாபத்தையும் கருவாகக் கொண்ட சிங்கள முதலாளித்துவ இனவாதிகள் அரசின் பேரினவாத சக்திகளோடு இணைந்து பொலீஸ் — ஊர்காவல் படைகளின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறைகளை நடாத்தி வருகிறார்கள். இவ்வாறு பாதிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையிடக் கூடிய தொழிற் சங்க அமைப்பை விட வேறு பாதுகாப்பு எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு கண்டனக் கடிதம் அல்லது கண்டன வேலைநிறுத்தம். இவை வழமையானவையாக இருந்த போதிலும் அதற்கப்பால் தமது உயிர் உடமைகளை இனவெறிக் கூட்டத்தினரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒருநிலை நிலவுகிறது. இந்நிலை மாறி தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு எதிரான சகலவகை வன்செயல்களில் இருந்தும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைக்கு மாறவேண்டும். அதைவிட வேறுவழி தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்க முடியாது.

## உன் சட்டரீதியான உரிமைகள்....

(1)

இந்த மண்ணில் மணிக்கொரு கொலை விழுந்தாலும்
கொலைகாரனின் உயிருக்கு உத்தரவாதம் இருக்கிறது —
சட்டப்படி அவனுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது.
இந்த மண்ணில் கற்பழித்தல் நடக்காமல்
காலை விடியாதெனிலும்
குற்றவாளியின் பாதுகாப்புக்கு உரிமை இருக்கிறது
சட்டம் அதற்கு உத்தரவாதம் தருகிறது.
இந்த மண்ணில் ஏழில் ஒருவருக்கு வேலையில்லை என்றாலும்
எவனையும் வேலை நீக்க முதலாளிக்கு வலிமை இருக்கிறது —
சட்டம் அவனுக்கு அதனை வழங்குகிறது.

இந்த மண்ணில் கொள்ளை அடித்த பணக்காரன்
அகப்பட்டால்
சட்ட நுணுக்கங்கள் அவனுக்குத் துணையாக நிற்கின்றன —
சட்டம் அதைக் காணாமலே தொடர்கிறது.

இந்த மண்ணில் எதையுமே தவறென்று நீ கண்டால்
விமர்சிக்க, மறுத்துரைக்க, நியாயங் கோர
சட்டப்படி உனக்கும் உரிமை இருக்கிறது, என்றாலும்
உன் சொல்லும் செயலும்
உளுத்துப்போன சட்டப் புத்தகத்தின் பின் மறையும்
மானுடப் பூச்சிகளை
உதறிப்போடுமளவுக்குத் துணியும் என்றால்
உன்னைத் தடுக்கவும் மறிக்கவும்
அவசியமானால் சிறைக்கு அனுப்பவும்
சட்டம் அவர்களுக்கு இடமளிக்கிறது.
அல்லாமல், சிலவேளை
உன்னை அடித்து நொறுக்க வரும்
அடையாளம் தெரியாத குண்டர்களின்
உரிமைகட்குப் பரிந்துரைக்கவும்
அவர்களது சுதந்திரத்தைப் பேணவும் கூட
சட்டத்தில் நிறையவே இடமிருக்கிறது.

இந்த மண்ணில்
நீரில் இறங்காமல் நீச்சல் அடிக்கவும்
யார் காதிலும் விழாதபடி பேசவும்
உனக்கு எல்லையற்ற உரிமை இருக்கிறது
இந்த மண்ணின் சட்டம்
அதற்குப் பூரண உத்தரவாதம் வழங்குகிறது.

(2)

இந்த வாக்கு மூலத்தில் ஒப்பமிடுவதன் முன்
அதை வாசிக்கவும் வாசிப்பிக்கவும்
அதன் அர்த்தத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும்
யாருடைய வற்புறுத்தலும் இன்றி

## தமிழ் மக்க...

(3ம் பக்கத் தொடர்)

நசுக்கப்பட்டு கீழ் நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஏகப் பெரும்பான்மையினரான தமிழர்களுக்கு புதிய வாழ்வு கொடுக்கக் கூடியதாக அமையவேண்டும் என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது. இலங்கையின் ஆளும் வர்க்கமாக உள்ளவர்களின் இழிவான இன அடக்கு முறைகளில் இருந்து தமிழர்களை விடுவிக்கும் அதேவேளை ஒரே இனத்திற்குள்ளும் மனிதனை மனிதன் சுரண்டி அடக்கும் கொடூரமான நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அது ஒரு அடிப்படை சமூதாய மாற்றம் ஏற்படுவதன் மூலமாகவே சாத்தியமாகலாம் என்றே இம் மூன்றாவது வகையினர் வலியுறுத்துகின்றனர். இவர்கள் தமது

மேற்கூறிய மூன்று முக்கிய பிரிவுகளில் உள்ளடக்கிய போதிலும் இவற்றின் உட்பிரிவு சார்ந்த கருத்தோட்டங்கள் மேலெழுந்த வாரியாகவும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவையாகவும் நடைமுறையில் ஒன்றை ஒன்று நிராகரிப்பவையாகவும் காணப்படுகின்றன. இதில் இருந்து ஆழமாக நோக்கின் தமிழர் விடுதலைக்கான மக்கள் நலன் சார்ந்த உறுதியான கருத்துநிலை எவ்வளவிற்கு தமிழ் சமுதாயத்தில் நிலைபெற்றுள்ளது என்பது மேலும் பரிசீலிக்க வேண்டிய தொன்றாகவே உள்ளது.

ஏனெனில் தமிழர் விடுதலையின் உண்மையான தன்மை தமிழர் சமுதாயத்தில் விளக்கம் பெறுவதற்கு

படுவதற்கான மனோநிலையை கட்டி வளர்க்க வேண்டும். எல்லாம் தானாகவே நடக்கும் அல்லது பழைய தலைவர்கள் சரிவராது விட்டாலும் இன்றைய இளைஞர்கள் ஏதோ முடிவு காண்பார்கள் என்ற மனோநிலையை விட்டகன்று உண்மையான விடுதலைக்கு ஏற்ற மனோநிலையை தமிழர் சமுதாயத்தில் உருவாக்க வேண்டும். அத்தகைய சரியான மனோநிலை தமிழர் மத்தியில் உருவாக கொள்கையும் நடைமுறையும் மிக மிக அவசியமானதும் தொடக்கப் புள்ளியுமாகும். சரியான கொள்கை, சரியான நடைமுறை மக்கள் நலன் சார்ந்த போக்குகள் நிச்சயம் மக்களை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் தமிழர் விடுதலைக்கான நீண்ட நோக்கான,

சட்டம் அவனுக்கு அதனை வழங்குகிறது.

இந்த மண்ணில் கொள்ளை அடித்த பணக்காரன்
அகப்பட்டால்
சட்ட நுணுக்கங்கள் அவனுக்குத் துணையாக நிற்கின்றன —
சட்டம் அதைக் காணுமலே தொடர்கிறது.

இந்த மண்ணில் எதையுமே தவறென்று நீ கண்டால்
விமர்சிக்க, மறுத்துரைக்க, நியாயங் கோர
சட்டப்படி உனக்கும் உரிமை இருக்கிறது, என்ருலும்
உன் சொல்லும் செயலும்
உளுத்துப்போன சட்டப் புத்தகத்தின் பின் மறையும்
மானுடப் பூச்சிகளை
உதறிப்போகுமளவுக்குத் துணியும் என்ருல்
உன்னைத் தடுக்கவும் மறிக்கவும்
அவசியமானுல் சிறைக்கு அனுப்பவும்
சட்டம் அவர்களுக்கு இடமளிக்கிறது.
அல்லாமல், சிலவேளை
உன்னை அடித்து நொறுக்க வரும்
அடையாளம் தெரியாத குண்டர்களின்
உரிமைகட்குப் பரிந்துரைக்கவும்
அவர்களது சுதந்திரத்தைப் பேணவும் கூட
சட்டத்தில் நிறையவே இடமிருக்கிறது.

இந்த மண்ணில்
நீரில் இறங்காமல் நீச்சல் அடிக்கவும்
யார் காதிலும் விழாதபடி பேசவும்
உனக்கு எல்லையற்ற உரிமை இருக்கிறது
இந்த மண்ணின் சட்டம்
அதற்குப் பூரண உத்தரவாதம் வழங்குகிறது.

(2)

இந்த வாக்கு மூலத்தில் ஒப்பமிடுவதன் முன்
அதை வாசிக்கவும் வாசிப்பிக்கவும்
அதன் அர்த்தத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும்
யாருடைய வற்புறுத்தலும் இன்றி
உன் சுயவிருப்பின் பேரிலேயே
அதில் ஒப்பமிடுவதற்கும்
ஒப்பமிட மறுப்பதற்கும்
அதற்குப் பதிலாக வேருெரு வாக்கு மூலத்தை
நீயே தயாரித்து ஒப்பமிடவும்
அல்லது வாக்குமூலமே தராதிருக்கவும்
உனக்குச் சட்டப்படி உரிமை இருக்கிறது

இந்த வாக்குமூலம்
உன்னைப் பயங்கரவாதி என்று தண்டனை வழங்கக்
காத்திருக்கிறதாக நீ நினைக்கிற
நீதி மன்றத்தின் முன்
உனக்கு விரோதமாகப் பயன்படுத்தப் படலாம்
என்பதால்
உன் வழக்கறிஞரை அழைத்து ஆலோசனை கேட்கவும்
உனக்குச் சட்டப்படி உரிமை இருக்கிறது.

உன் மேனியில் (எங்கள் அபிப்பிராயத்தில்)
நீயாகவே ஏற்படுத்திக் கொண்ட
ஊமைக் காயங்களும் ஊனவுகளும்
எவ்வாறு ஏற்பட்டன என்று
எங்கள் மறியற் கூட வைத்தியரிடம்
விசாரிக்கவும் உனக்கு உரிமை இருக்கிறது.

இவையெல்லாம் ஒருவேளை உனக்கு
முன்னமே தெரிந்தும் இருக்கலாம்.
இரவில் காவல் நிற்கிற மூரடர்கட்குத்
தெரியாமலும் இருக்கலாம்.

இனிமேல் உனக்கும் அவர்கட்கும்
இவைபற்றித் தெரிந்தென்ன, தெரியாமலென்ன?
நாங்கள் உன்னிடம் நேற்றே ஒப்பம் வாங்கியாயிற்றே!

— ஸ்வப்ன

லது அற்ப சொற்பமாக வழங்கப்பட்டன, இதனுல் தோட்டத் தொழிலாளர்கள் இந்த ஆட்சியின்மீது விரக்தியும் வெறுப்பும் கொண்டவர்களாக இருக்கிருர்கள். அதை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தியும் வருகிருர்கள்.

ஆதலால் இத்தகைய மக்களை பல்வேறு காரணங்களைக்

மோதல்களை உருவாக்குவதும் அதனுல் தோட்ட லயன்கள் தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டு தீயிடப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. சுயநலத்தையும் சுயலாபத்தையும் கருவாகக் கொண்ட சிங்கள முதலாளித்துவ இனவாதிகள் அரசின் பேரினவாத சக்திகளோடு இணைந்து பொலீஸ்

தமக்கு எதிரான சகலவகை வன்செயல்களில் இருந்தும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைக்கு மாறவேண்டும். அதைவிட வேறுவழி தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்க முடியாது.

## தமிழ் மக்க...

(3ம் பக்கத் தொடர்)

நசுக்கப்பட்டு கீழ் நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஏகப் பெரும்பான்மையினரான தமிழர்களுக்கு புதிய வாழ்வு கொடுக்கக் கூடியதாக அமையவேண்டும் என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது. இலங்கையின் ஆளும் வர்க்கமாக உள்ளவர்களின் இழிவான இன அடக்கு முறைகளில் இருந்து தமிழர்களை விடுவிக்கும் அதேவேளை ஒரே இனத்திற்குள்ளும் மனிதனை மனிதன் சுரண்டி அடக்கும் கொடூரமான நிலைக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அது ஒரு அடிப்படை சமூதாய மாற்றம் ஏற்படுவதன் மூலமாகவே சாத்தியமாகலாம் என்றே இம் மூன்ருவது வகையினர் வலியுறுத்துகின்றனர். இவர்கள் தமது நிலைக்கு நடைமுறை உதாரணமாக பங்களாதேஷ் நாட்டின் அன்றைய இன்றைய நிலையை சுட்டிக் காட்டுகிருர்க[illegible] இது ஆழ்ந்த சிந்தனைக்கு[illegible]ன்ருகவே தென்படுகிறது.

இவ்வாறு தமிழர் விடுதலை பற்றிய கருத்துக்களை மேற்கூறிய மூன்று முக்கிய பிரிவுகளில் உள்ளடக்கிய போதிலும் இவற்றின் உட்பிரிவு சார்ந்த கருத்தோட்டங்கள் மேலெழுந்த வாரியாகவும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டவையாகவும் நடைமுறையில் ஒன்றை ஒன்று நிராகரிப்பவையாகவும் காணப்படுகின்றன. இதில் இருந்து ஆழமாக நோக்கின் தமிழர் விடுதலைக்கான மக்கள் நலன் சார்ந்த உறுதியான கருத்துநிலை எவ்வளவிற்கு தமிழ் சமுதாயத்தில் நிலைபெற்றுள்ளது என்பது மேலும் பரிசீலிக்க வேண்டிய தொன்ருகவே உள்ளது.

ஏனெனில் தமிழர் விடுதலையின் உண்மையான தன்மை தமிழர் சமுதாயத்தில் விளக்கம் பெறுவதற்கு இதுவரை செய்யப்பட்டவற்றிலும் பார்க்க அதிகமாகவும் கடுமையாகவும் செய்யப்படவேண்டியுள்ளது. பழம் பெருமையிலும், தவருன கொள்கைகளினுலும் வழிநடத்தப்பட்டு வந்த தமிழ் மக்கள் மத்தியில் சரியான கொள்கையிலும் நடைமுறையிலும் அணிதிரட்டப்படுவதற்கான மனோநிலையை கட்டி வளர்க்க வேண்டும். எல்லாம் தானுகவே நடக்கும் அல்லது பழைய தலைவர்கள் சரிவராது விட்டாலும் இன்றைய இளைஞர்கள் ஏதோ முடிவு காண்பார்கள் என்ற மனோநிலையை விட்டகன்று உண்மையான விடுதலைக்கு ஏற்ற மனோநிலையை தமிழர் சமுதாயத்தில் உருவாக்க வேண்டும். அத்தகைய சரியான மனோநிலை தமிழர் மத்தியில் உருவாக கொள்கையும் நடைமுறையும் மிகமிக அவசியமானதும் தொடக்கப் புள்ளியுமாகும். சரியான கொள்கை, சரியான நடைமுறை மக்கள் நலன் சார்ந்த போக்குகள் நிச்சயம் மக்களை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் தமிழர் விடுதலைக்கான நீண்ட நோக்கான, பரந்த கொள்கை மேலும் மேலும் செழுமைப்படுத்தப் படவேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களின் மனோநிலையும் அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட வேண்டும். அதுவே தமிழர் விடுதலையின் பிரதான அம்சமாகும். ★

## கறுப்பு அமெ...

(3ம் பக்கத் தொடர)

றுப்புள்ளி வைப்பது திண்ணம்.

'பாதகமிகுந்த காலனிச ஏகாதிபத்திய அமைப்பு முறை, நீக்ரோ மக்களை அடிமைப்படுத்துவது, நீக்ரோ மக்களை வர்த்தகம் செய்வது ஆகியவற்றுடன் ஓங்கி வளர்ந்தது. கறுப்பு மக்களின் பூரண விடுதலையுடன் அது நிச்சயம் முடிவுக்கு வரும என்று 1963ல் ''அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இனப்பாகுபாட்டுக்கு எதிரான ஆப்ரோ அமெரிக்கரின் நீதியான போராட்டத்தை ஆதரிக்கும் அறிக்கையில் நான் கூறினேன். இப்பொழுதும் நான் இந்தக் கருத்தில் உறுதியாக நிற்கின்றேன்.

தற்பொழுது உலகப் புரட்சி ஒரு மகத்தான புதிய யுகத்தில் பிரவேசித்துள்ளது. ஆப்ரோ - அமெரிக்காவின் விடுதலைக்கான போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலகம் பூராவுமுள்ள மக்களின் பொதுப் போராட்டத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி. உலகில் பல்வேறு நாட்டு தொழிலாளர்களும் விவசாயிகளும் புரட்சிகர புத்திஜீவிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட விரும்பும் எல்லா மக்களும் செயல்பட்டு ஆப்ரோ - அமெரிக்கரின் போராட்டத்துக்குப் பலம் வாய்ந்த ஆதரவு அளியுங்கள்! எனவும், உலகம் பூராவுமுள்ள மக்கள் மேலும் நெருக்கமாக ஐக்கியப்பட்டு எமது பொது எதிரியான அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் அதன் சகபாடிகளுக்கும் எதிராக நீண்டகால தீவிரமான தாக்குதல் தொடுங்கள்! எனவும் நான் வேண்டுகின்றேன். காலனிசம், ஏகாதிபத்தியம், சகல சுரண்டல் அமைப்பு முறைகள் ஆகியவற்றின் பூரண வீழ்ச்சியும், உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட எல்லா மக்களினதும் தேசங்களினதும் பூரண விடுதலையும் வெகு தூரத்தில் இல்லை என்று நிச்சயமாகக் கூறலாம். ★

செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது. செம்பதாகை Registered as a Newspaper in Sri Lanka

# கொள்ளை, கொலை, ஆட்கடத்தல் அதிகரிப்பு!

# பாதுகாப்பற்ற நிலையில் மக்கள் பரிதவிப்பு!!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒருபுறம் ஆயுதப் படைகளும் அவற்றின் அடக்குமுறைகளும் மறுபுறம் இனம் தெரியாதோர் நடத்திவரும் அட்டகாசங்கள்; இவற்றால் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வு சீர்குலைந்து பயமும் பதட்டமும் கொண்ட சூழ்நிலைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

அண்மைக் காலங்களில் கொள்ளைகள் பெருகிஉள்ளன. கொள்ளைகளின் மத்தியில் கொலைகளும் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. ஆட்களைக் கடத்தி மறைத்துவைத்திருத்தல், பணயப் பணம் கேட்டல் போன்றன பெருகி உள்ளன. இன்று தமிழ்மக்களிடையே நடைபெற்று வரும் இத்தகைய கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் செய்திகளே நாளாந்தம் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருக்கிறன. இவற்றை யார் செய்து வருகிறார்கள்? இனம் தெரியாதோர், இலக்கமற்ற வாகனங்கள், நவீன ஆயுதங்கள்; அத்துடன் கோஷ்டி கோஷ்டியாக இராணுவப் பாணியில் சுற்றி வளைத்து, வேட்டுகள் தீர்த்து நடத்தப்படும் இக்கொள்ளை கொலைகளை சாதாரண கொள்ளையர் அதிலும் இன்றைய சூழலில் செய்ய முடியுமா? மக்கள் தற்பொழுது தம்மை எதிர்நோக்கும் பாதிப்புக்களுக்கு எதிராக ஆழமாகச் சிந்திக்க முற்பட்டுள்ளனர். அதன் வெளிப்பாடுகளாக ஆர்ப்பாட்டம், மறியல், உண்ணாவிரதம் என்பவை பரவலாக நடைபெறுகின்றன. வளர்த்த கடாக்களே மார்பில் பாய்கின்றனவா? என்ற வலுவான சந்தேகங்கள் பகிரங்கமாகவே மக்கள் மத்தியில் பேசப்படுகின்றன.

இவ்வாறு தமிழ் மக்கள் இன்றைய நிலையில் அதிருப்திக்கும், வெறுப்புக்கும் உள்ளாகுவது பெரும் வேதனைக்குரியதொன்றாகும். ஏனெனில் அரசின் அடக்குமுறைகளையும், கெடுபிடிகளையும் எதிர்த்து குரல் கொடுத்துப் போராடவேண்டிய தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் இருந்து உருவாகும் அநீதி அட்டூழியங்களுக் கெதிராகப் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது துர்ப்பாக்கியமே. அதுமட்டுமல்ல இந் நிலையை எவ்வாறு அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும், உலகின் முன் எவ்வாறு பிரச்சாரம் செய்யப்படும்-என்பதைச் சிறிதளவாவது இத்தகைய கொள்ளைகள் கொலைகள் ஆட்கடத்தல்களில் ஈடுபடுவோர் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு தொடர்ந்து ஈடுபடுவோர் மக்களைப்பற்றியோ அன்றி அவர்களின் துன்ப துயரங்கள் பற்றியோ அக்கறையற்றவர்களாகவே இருக்கமுடியும். எனவே தமிழ் மக்களின்மீதும் அவர்களது அன்றாட வாழ்க்கை 'மீதும் அக்கறை கொண்ட சகலசக்திகளும் கூட்டாகவோ அன்றித் தனித்தனியாகவோ முன்வந்து இவற்றைத் தடுத்து நிறுத்தவும், குற்றவாளிகளை மக்கள் முன் நிறுத்தவும், மக்களின் தீர்ப்புக்கிணங்க தண்டனை வழங்கவும் முன்வரல் வேண்டும். இல்லாதவிடத்து தமிழ் மக்களின் விரக்தி, வெறுப்பு, வேதனை யாவும் எதிரிக்கு உரமளிப்பதாகவே இருக்கும். அத்தகைய நிலை முழுத் தமிழ் மக்களுக்கும் பாரிய இழப்பாகவே மாறும்.

## படுகொலைகளின்

( 2ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கால வளர்ச்சிப் போக்கைப் புரிந்துகொள்ளும் திறனற்று உடனடியான தமது பாராளுமன்ற ஆசனங்களின் வெற்றிக்கான வாய்ப்பைப் பற்றியே சிந்தித்தனர். தலைவர்களும் அவர்களை ஆதரித்து சப்பைகட்டி தவறானவற்றைச் சரியென்று வாதிட்டு வந்தவர்களும் இன்று தொடர்ந்து செல்லும் அரசியல் படுகொலைகளைக்கண்டு விழி பிதுங்கி நிற்கிறார்கள்.

அண்மையில் தமிழர் கூட்டணியின் இரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளோ அல்லது பொது - தனி வாழ்க்கையோ எவ்வாறானதாக இருந்தபோதிலும் அவர்களுக்கு நேர்ந்த படுகொலை மரணங்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. இவர்களின் படுகொலைகள் மட்டுமன்றி இதுவரை இடம் பெற்ற தனிநபர் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் எதுவுமே ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

இந்தப் படுகொலைகளுக்கு யார் பொறுப்பு? எவர் செய்திருப்பார் என்று ஆராய்வதிலும் பார்க்க இவ்வாறாகத் தொடர்ந்து செல்லும் படுகொலைகளின் அத்திவாரம் எங்கிருந்து தொடங்கியது. யாரால் இவற்றுக்கான ஆரம்ப விதைகள் விதைக்கப்பட்டன. அது எவ்வாறு வளர்ந்து வந்தது? எதிர்காலத்தில் எவ்வாறு செல்லப் போகின்றது என்பதை ஆராய்ந்து மக்களின் ஏகோபித்த விருப்பத்துடன் அதைத் தடுத்து நிறுத்த ஆவனசெய்யப்படவேண்டும் என்பதே முக்கியமானதாகும். மற்றுமொரு மனிதனை படுகொலைக்குள்ளாக்கும் போது பாராமுகமும், உள்ளார்ந்த உற்சாகமும் வழங்கிவிட்டு, அதே கொலை தன்னைத் தழுவவரும் போது ஆ... ஊ.. என அலறித் துடிக்கின்ற சுத்த சுயநலப்போக்கு தமிழ் சமுதாயத்திலிருந்து அறவே அகற்றப்படவேண்டும். எனவே அரசியல் படுகொலைகள் எங்கிருந்து வந்தாலும் எவரால் நிகழ்த்தப்பட்டாலும் தவறானது என்று கண்டித்து நிராகரிப்பதற்கு மக்கள் முன்வரல் வேண்டும். அதுவே தனிநபர் படுகொலைகளைத் தடுக்க ஒரே வழியாகும். முகம் பார்த்து நியாயம் கூறும்நிலை நம் மக்கள் மத்தியில் இருந்து மறையவேண்டும். நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட முன்வரவேண்டும்.

## உ. முத்திரை பறிப்பு

அண்மையில் யூ. என். பி அரசு வறுமை நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது அப்போது இலங்கையின் வறுமைப்பட்ட மக்களுக்கு ஏதோ நிவாரணம் கிடைக்கப்போவதாகவே சிலர் அப்பாவித்தனமாக நம்பினர். ஆனால் கடந்தவாரம் அரசினால் விநியோகிக்கப்பட்ட பத்திரத்தை நிரப்ப முற்பட்டபோது தான் பலருக்கு உண்மை தெரியவந்தது. அதாவது ஏற்கனவே உள்ள உணவுமுத்திரைகளையும் பறிக்கவே இத்திட்டம் என்பதாகும். இந்த அரசு பதவிக்கு வந்தபின் கூப்பனைப் பறித்தது. மக்கள் எதிர்த்தபோது முத்திரையை கிள்ளிப்போட்டது. இப்பொழுது அதற்கும் மண்போட முன்வந்துள்ளது. எழுநூறு ரூபாவுக்குக் கீழ் குடும்ப வருமானம் பெறுவோரின் எண்ணிக்கை நாட்டில் மிகக் குறைவானதே. ஆனால் எழுநூறு ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோரால் வாழ்க்கை நடத்தமுடியுமா? இன்றைய வாழ்க்கைச் செலவு என்ன? நாளாந்தம் ஏறிச்செல்லும் பொருட்களின் விலைகள் என்ன? உழைக்கும் மக்களின் உண்மை நிலையை உயர் வர்க்க அரசினால் உணரமுடியுமா? இல்லவே இல்லை.

## போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்க வேண்டும். அவ்வாறு செய்யுமாக இருந்தால் தான் அரசியல் தீர்வை நாடி

ஏற்கெனவே பயனற்ற விதத்தில் நடைமுறையில் இருந்த போர்நிறுத்தத்தை விட தற்போதைய போர் நிறுத்தம் பயனுள்ள வகையில் அமைத்தால் நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக

## பேச்சுவார்த்தை

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

குரலாக இன்று இலங்கையில் இருந்து வரும் ஒரு தலைவர் என்ற வகையிலும் இனப்

## திருமலையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தை முறியடிக்க முடியும். பேரினவாதத்தின் பக்கத்திற்கு சிங்கள மக்களை தள்ளி விடும் நடைமுறைகளுக்குப்

கொலைகளும் தாக்குதல்களும் … களை சாதாரண கொள்ளையர் … குரியதொன்றாகும். ஏனை … வோர் மக்களைப்பற்றியோ … பாரிய இழப்பாகவே மாறும்.

## படுகொலைகளின்

( 2ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கால வளர்ச்சிப் போக்கைப் புரிந்துகொள்ளும் திறனற்று உடனடியான தமது பாராளுமன்ற ஆசனங்களின் வெற்றிக்கான வாய்ப்பைப் பற்றியே சிந்தித்தனர். தலைவர்களும் அவர்களை ஆதரித்து சப்பைகட்டி தவறானவற்றைச் சரியென்று வாதிட்டு வந்தவர்களும் இன்று தொடர்ந்து செல்லும் அரசியல் படுகொலைகளைக்கண்டு விழி பிதுங்கி நிற்கிறார்கள்.

அண்மையில் தமிழர் கூட்டணியின் இரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளோ அல்லது பொது - தனி வாழ்க்கையோ எவ்வாறானதாக இருந்தபோதிலும் அவர்களுக்கு நேர்ந்த படுகொலை மரணங்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. இவர்களின் படுகொலைகள் மட்டுமன்றி இதுவரை இடம் பெற்ற தனிநபர் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் எதுவுமே ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

இந்தப் படுகொலைகளுக்கு யார் பொறுப்பு? எவர் செய்திருப்பார் என்று ஆராய்வதிலும் பார்க்க இவ்வாறாகத் தொடர்ந்து செல்லும் படுகொலைகளின் அத்திவாரம் எங்கிருந்து தொடங்கியது. யாரால் இவற்றுக்கான ஆரம்ப விதைகள் விதைக்கப்பட்டன. அது எவ்வாறு வளர்ந்து வந்தது? எதிர்காலத்தில் எவ்வாறு செல்லப் போகின்றது என்பதை ஆராய்ந்து மக்களின் ஏகோபித்த விருப்பத்துடன் அதைத் தடுத்து நிறுத்த ஆவனசெய்யப்படவேண்டும் என்பதே முக்கியமானதாகும். மற்றுமொரு மனிதனை படுகொலைக்குள்ளாக்கும் போது பாராமுகமும், உள்ளார்ந்த உற்சாகமும் வழங்கிவிட்டு, அதே கொலை தனனைத் தழுவவரும்போது ஆ... ஊ... என அலறித் துடிக்கின்ற சுத்த சுயநலப்போக்கு தமிழ் சமுதாயத்திலிருந்து அறவே அகற்றப்படவேண்டும். எனவே அரசியல் படுகொலைகள் எங்கிருந்து வந்தாலும் எவரால் நிகழ்த்தப்பட்டாலும் தவறானது என்று கண்டித்து நிராகரிப்பதற்கு மக்கள் முன்வரல் வேண்டும். அதுவே தனிநபர் படுகொலைகளைத் தடுக்க ஒரே வழியாகும். முகம் பார்த்து நியாயம் கூறும்நிலை நம் மக்கள் மத்தியில் இருந்து மறையவேண்டும். நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட முன்வரவேண்டும்.

❋

# உ. முத்திரை பறிப்பு

அண்மையில் யூ. என். பி அரசு வறுமை நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது அப்போது இலங்கையின் வறுமைப்பட்ட மக்களுக்கு ஏதோ நிவாரணம் கிடைக்கப்போவதாகவே சிலர் அப்பாவித்தனமாக நம்பினர். ஆனால் கடந்தவாரம் அரசினால் விநியோகிக்கப்பட்ட பத்திரத்தை நிரப்ப முற்பட்டபோது தான் பலருக்கு உண்மை தெரியவந்தது. அதாவது ஏற்கனவே உள்ள உணவுமுத்திரைகளையும் பறிக்கவே இத்திட்டம் என்பதாகும். இந்த அரசு பதவிக்கு வந்தபின் கூப்பனைப் பறித்தது. மக்கள் எதிர்த்தபோது முத்திரையை கிள்ளிப்போட்டது. இப்பொழுது அதற்கும் மண்போட முன்வந்துள்ளது. எழுநூறு ரூபாவுக்குக் கீழ் குடும்ப வருமானம் பெறுவோரின் எண்ணிக்கை நாட்டில் மிகக் குறைவானதே. ஆனால் எழுநூறு ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோரால் வாழ்க்கை நடத்தமுடியுமா? இன்றைய வாழ்க்கைச் செலவு என்ன? நாளாந்தம் ஏறிச்செல்லும் பொருட்களின் விலைகள் என்ன? உழைக்கும் மக்களின் உண்மை நிலையை உயர் வர்க்க அரசினால் உணரமுடியுமா? இல்லவே இல்லை.

## போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்க வேண்டும். அவ்வாறு செய்யுமாக இருந்தால் தான் அரசியல் தீர்வை நாடி நிற்கின்றது என்ற நிலையை மக்கள் நம்பமுடியும். இவ் இரண்டாவது போர் நிறுத்தமும் அர்த்தமுள்ள தொன்றாக அமையமுடியும்.

அதேவேளை தமிழ் தீவிரவாத இளைஞர் இயக்கங்களும் போர்நிறுத்தத்தை அரசு மீறுவதற்கு சாட்டுக்களைக் கூறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தாது பார்த்துக்கொள்வது அவசியம். போர்நிறுத்த காலத்தின் போது திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் அரசு நடாத்திய யுத்த மீறல் சம்பவங்களுக்கு பல சாட்டுக்களையும், காரணங்களையும் கூறிய விடயத்தைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும். அரசின் யுத்தமீறல் சம்பவங்களுக்கு இளைஞர் சக்திகளின் நடவடிக்கைகள் சாட்டாகவோ, காரணமாகவோ இருக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும். அவ்வாறு இருந்தால் அரசு மேலும் தன்னை உலகின் முன் அம்பலப்படுத்திக் கொள்ளவே செய்யும் அல்லாதுவிடின் தனது பிரசாரத்தை எதிர்விதமாகச் செய்ய வாய்ப்பளித்துவிடும்.

ஏற்கெனவே பயனற்ற விதத்தில் நடைமுறையில் இருந்த போர்நிறுத்தத்தை விட தற்போதைய போர் நிறுத்தம் பயனுள்ள வகையில் அமைந்தால் நாட்டு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக நொந்தநிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் ஆறுதலாகவே அமையும். ஆனால் அவ்வாறு அமைவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுமா என்பது இன்னும் கேள்விக்குறியேயாகும்.

தற்போதைய போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க பதினொருபேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆறு சிங்களவர், மூன்று தமிழர், இரண்டு முஸ்லீம்கள்; இவர்கள் அனைவரும் சமூகத்தின் உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அரசின் தலையீட்டுக்கு ஆளாகாமல், இனவாதமின்றி நேர்மையாகச் செயற்பட்டால் போர்நிறுத்த நடைமுறைக்கு பெருமளவு உதவ முடியும். அல்லாதவிடத்து அக்குழுவும் பயனற்றதாகிவிடும். எங்கும் எதிலும் இனவாதம் என்ற இழிநிலையே வலுப்படும். எதற்கும் பெருமுயற்சிகளுக்குப் பின் நடைமுறைக்கு வந்த இவ் இரண்டாவது போர் நிறுத்தத்தை சிறிது பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

❋

## பேச்சுவார்த்தை

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

குரலாக இன்று இலங்கையில் இருந்து வரும் ஒரு தலைவர் என்ற வகையிலும் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையில் பங்கு வகிப்பது அவசியமாகும். அதே வேளை இந்திய வம்சாவழி மக்களின் தலைவராகவும் அவர் இருந்து வருவது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே இந்தியாவிற்கு அழைக்கப்பட்டிருக்கும் திரு. தொண்டமான் இனப்பிரச்சினை பற்றிக் கொண்டிருக்கும் சில நிதானமான முன்னேக்கிய கருத்துக்களை தொடர்ச்சியாக வற்புறுத்தி துணிவுடன் செயல்பட்டு வருபவர் என்ற அடிப்படையில் அவரின் பங்களிப்பு இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அவசியமாகும். அது வெளியில் இருந்து ஆலோசனைக்காக மட்டுமன்றி பேச்சுவார்த்தையில் அவரைப் பங்குகொள்ளச் செய்வதற்கும் தமிழர் பிரதிநிதிகள் இந்திய இலங்கை அரசுகளை வற்புறுத்த வேண்டும். அது தமிழ்க் குழுக்களுக்கு பலமானதாகவும் இருக்க முடியும். ★

## திருமலையில்

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

டத்தட்ட முப்பதினாயிரத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாக வந்திருப்பதாக அறியப் படுகின்றது. இதே அளவானோர் திருமலையின் பல பகுதிகளில் அகதி முகாம்களில் இருந்து வருவதாகவும் தெரியவருகின்றது. அப்படியானல் பேரினவாத வெறியின் தாக்குதல் எவ்வளவிற்கு அகோரமானது என்பது புலப்படும். இவ்வாறான இன அழிப்புக்கான ஆலோசனைகளும், அவற்றின் கொடுமையான நடைமுறைகளும் எங்கிருந்து பெறப்பட்டன. வேறு எங்குமல்ல, இஸ்ரேலிடமும், அதன் மொசாட் படையிடமும் இருந்ததேயாகும். பிசாசுடன் கூடியவர்கள் மனிதர்களாகத் தொடர்ந்து இருப்பது முடியாத ஒன்றேயாகும். எனவே பேரினவாத வெறிபிடித்த யூ. என். பி பேயாட்சியை சரியான வழிகளில் எதிர்த்துப் போராடுவதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழிகிடையாது. தமது நீதியான போராட்டத்திற்கு சிங்கள உழைக்கும் மக்களை ஐக்கியப்படுத்தினல் மட்டுமே தமிழ் மக்கள் பேரினவாதத்தை முறியடிக்க முடியும். பேரினவாதத்தின் பக்கத்திற்கு சிங்கள மக்களை தள்ளிவிடும் நடைமுறைகளுக்குப் பதிலாக தமிழ் மக்களின் நீதியான போராட்டத்துடன் சிங்கள சாதாரண மக்களை இணைப்பதற்கு ஏற்ற வழிமுறைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதுவே திருகோணமலை போன்ற தமிழர்களது பாரம்பரிய பிரதேசங்களை பாதுகாத்து நிற்க உள்ள சரியான வழியாகும். ★

## இஸ்ரேலியரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்தரமான உளவுப் படை என ரேகனால் நற்சாட்சி வழங்கப்பட்ட இஸ்ரேலிய மொசாட் படையைத் தன் மடியிலே கட்டி வைத்துக் கொண்டு அதன் ஆலோசனையின்படி தனது சொந்தநாட்டு மக்களை கொன்று குவித்து வரும் ஒரு கொலைகார ஆட்சியில் எப்படி இஸ்ரேலியக் கொலைவெறியைக் கண்டிக்க முடியும். வெறும் ஒப்பாசாரக் கண்டனமே தவிர உண்மையான கண்டனம் அல்ல.

★

அச்சுப்பதிவு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு : சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.